# எனது போர் முறை

ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகள் சென்னையிற் செய்த
முதற் பிரசங்கம்



ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர்

1930.

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

அவதார புருஷர்களான ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகாநந்தர் இவர்களின் அரிய உபதேசங்களையும், நாட்டின் முன்னேற்றத்திற்கான பல கட்டுரைகளையும் கொண்டு வெளிவரும் மாதத் தமிழ்ப் பத்திரிகை.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூ. 3.
வெளிநாட்டுக்கு ரூ. 4.

---

# பக்தி புகட்டும் நூல்கள்

| | | | | விஜயம் சந்தாதார்க்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்விய சரிதம் (விரிவானது).... | 5 | 0 | 0 | 4 | 8 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) .... | 0 | 8 | 0 | 0 | 7 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் . | 1 | 8 | 0 | 1 | 6 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 1003 உபதேச மொழிகள் . | 1 | 6 | 0 | 1 | 4 | 0 |
| மேற்படி காலிகோ பைண்டு ... | 1 | 12 | 0 | 1 | 10 | 0 |
| குருதேவர் வாக்கியம் .... | 0 | 5 | 0 | 0 | 4 | 0 |
| நமது தாய்நாடு .... | 0 | 8 | 0 | 0 | 7 | 0 |
| பக்தியோகம் .... | 0 | 10 | 0 | 0 | 8 | 0 |
| கர்மயோகம் .... | 0 | 12 | 0 | 0 | 10 | 0 |
| சிகாகோ பிரசங்கம் .... | 0 | 5 | 0 | 0 | 4 | 0 |
| விவேகானந்தரின் கடிதங்கள் .... | 0 | 8 | 0 | 0 | 6 | 0 |
| பவாஹாரி பாபா .... | 0 | 3 | 0 | 0 | 3 | 0 |
| ஜகஜீவபர விளக்க வினாவிடை .... | 0 | 12 | 0 | 0 | 10 | 0 |
| பக்திமார்க்கம் .... | 0 | 5 | 0 | 0 | 4 | 0 |
| முத்திநெறி .... | 0 | 2 | 0 | 0 | 2 | 0 |
| எல்லாவற்றிலும் இறைவனைக் காணல் .... | 0 | 2 | 0 | 0 | 2 | 0 |

 180

## முன்னுரை

1893-ம் வருஷம் அமெரிக்கநாட்டில் கூடிய சர்வமத மகா சபையில், ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் ஹிந்து மதத்தை நிலை நாட்டினுரென்பது யாவரும் அறிந்ததே. அச்சபை கலைந்தபிறகு அந்நாட்டில் அவர் சிலவருடங்கள் ஹிந்துமதத்தைப் பரவச்செய்யும் பெரிய கைங்கரியத்தில் ஈடுபட்டு, மேனுட்டாரும் நன்கு மதிக்கும்படி உழைத்தார் என்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயமே. பிறகு இம் மகான் இந்தியாவுக்குத் திரும்பி வந்தபோது முதல் முதல் இலங்கையிலுள்ள கொழும்பு நகரத்தி லிறங்கி அங்கிருந்து வட இந்தியாவில் இமாலயப் பிரதேசத்திலுள்ள ஆல்மோரா என்னும் இடத்திற்குப் போகும் வரையில் ஆங்காங்கு அனேக விடங்களில் அரிய பிரசங்கங்கள்செய்தார். இப் பிரசங்கங்களில் அதிக முக்கியமானதும் எல்லாருடைய மனதையும் அதிகமாகக் கவர்ந்ததுமான 'எனது போர் முறை' என்னும் இப் பிரசங்கம் சென்னையில் 1897-ம் வூடத்தில் செய்யப்பட்டது. ஸ்ரீமத் சுவாமிகள், தாம் மேனுட்டி லிருந்தபோது அடைந்த அனுபவங்களையும், அவ் வனுபவங்களால் தமக்குத் தமது தாய் நாட்டின் பேரில் விளைந்த தேசாபிமானத்தையும், இந்தியாவின் முன்னேற்றத்திற்கான பல வழிகளையும் தெளிவாக எடுத்

துரைத்திருக்கின்றமையின், நமது தேசாபிமானிகள் யாவரும் இவைகளை வாசித்துப் பயன் பெறுமாறு பிரத்தியேகமாக இப் பிரசங்கம் தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது. பிரசங்கத்தின் அருமை அதனை வாசித்தலினாலேயே விளங்குமாதலின் அதனைப் பற்றிக் கூறு தொழிந்தனம்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர்.

# எனது போர் முறை

கூட்ட மிகுதியால் அன்றையதினம் கூட்டத்தைச் சரிவர நம்மால் நடத்த முடியாமற் போனதினுலே, சென்னைவாசிகள் ஒருமனதாய் என்னிடம் காட்டியபேரன்பிற்காக என் வந்தனத்தைச் செலுத்துவதற்கு ஏற்றதாக இத்தகுந்த தருணத்தை எடுத்துக்கொள்ளுகிறேன். எனக்களிக்கப்பட்ட அந்த வரவேற்புப்பத்திரங்களின் ஒவ்வொன்றிலுமுள்ள அழகான சொற்களுக்காக, என்னை அதிற் கண்டுள்ள பிரியமும் பெருமையும் வாய்ந்த மொழிகளுக்குத் தகுந்த பாத்திரனுய்ச் செய்யும்படி ஆண்டவனைப் பிரார்த்திப்பதைத் தவிர, எனது நன்றியறிதலை வேறு எவ்விதம் சரிவர எடுத்துச் சொல்வதென்பது எனக்கு விளங்கவில்லை; நம்முடைய மதத்திற்காகவும், நம்முடைய தாய் நாட்டிற்காகவுமே எனதுயிருள்ளளவும் நான் உழைக்கவும், அவற்றிற்கு என்னைத் தகுதியுடையவனுய்ச் செய்து கொள்ளவும் கடவுள் அருள் புரிவாராக.

சீமான்களே! எனது எல்லாக் குறைகளுக்குமிடையே என்னிடம் கொஞ்சம் தைரியமும் இருப்பதாக நான் எண்ணுகிறேன். இந்தியாவிலிருந்து மேற்குத் திசைக்குச் செல்லவேண்டிய செய்தியொன்று என்னிடமிருந்தது; அதை யான் தைரியமாக அமெரிக்கர்களுக்கும் ஆங்கில ஜனங்களுக்கும் அளித்தேன். உங்களுக்கு, நான் இன்றைய விஷயத்தை யெடுத்துக்கொள்வதற்கு முன்னுல், சில தைரிய வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். என்னை எதிர்க்கவும், எனது முன்னேற்றத்தைத் தடுக்கவும், கூடு

மானால் என்னை யெங்குமில்லாதபடி அடியோடு ஒழித்து விடவும் தகுந்த சில யுக்திகள் என்னைச் சுற்றி நிகழ்ந்து வந்தன. இவ்வித அற்ப காரியங்கள் எக்காலத்தும் முற்றுப் பெறுவாதலால், அதன்படி இவைகளும் தவறிப்போனதற்குக் கடவுளைப் போற்றுவோமாக! சென்ற மூன்று வருஷங்களாக சில புரட்டுக்கள் இருந்து வந்திருக்கின்றன; நான் வெளிநாடுகளில் இருக்குமளவும் ஒரு வார்த்தையும் பேசாது மௌனமாயிருந்தேன். ஆனால் இப்பொழுது எனது தாய்நாட்டின் நிலத்தின்மீது நின்றுகொண்டு அவற்றை விளக்கும்பொருட்டுச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவ்வார்த்தைகளின் பயனாய் என்ன நேரிடுமோ வென்று நான் சிறிதும் கவலை கொள்ளவில்லை; அவ்வார்த்தைகளிலிருந்து நீங்கள் என்னைப்பற்றி என்ன அபிப்பிராயங் கொள்வீர்களென்பதைப்பற்றியும் நான் யோசிக்கவில்லை. அதைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை. ஏனென்றால், நான்கு வருடங்களுக்கு முன்னால் ஒரு தடியையும் கமண்டலத்தையும் கையிற்கொண்டு உங்கள் நாட்டிற்குள் எவ்வித சன்னியாசியாக நுழைந்தேனோ அதே சன்னியாசியாக இன்றைக்கும் நான் இதோ இப்பரந்த உலகத்தை என் முன்னாற்கொண்டு இங்கு நிற்கின்றேன். முகவுரையை அதிகமாக வளர்த்தாமல், விஷயத்தை யான் ஆரம்பிக்கின்றேன். 'தியஸாபிகல்' சபை (Theosophical Society) யைப் பற்றித் தலைப்பிலேயே சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இத் தியஸாபிகல் ஸபையாரால் இந்தியாவில் உண்மையாகவே சிறிது நன்மை பயக்கப்பட் டிருக்கிறதென்பது சொல்லாமலே விளங்கும். ஆதலால் இவர்களிடம், முக்கியமாக அன்னீ பெஸண்ட் அம்மாளிடம், ஒவ்வொரு இந்துவும் நன்றி பாராட்டுகின்றனன். இவரைப்பற்றி நான் ஒரு சிறிதே

அறிந்துள்ளே னென்றாலும், அறிந்தமட்டில், இவர் நமது தாய்நாட்டிடம் யதார்த்தமான நல்லெண்ணங் கொண்டவராயும், தமது சக்திக் கியன்றளவு நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக வேலை செய்து வருவதாகவும் நான் அபிப்பிராயப்படுகிறேன். அதற்காக ஒவ்வொரு உண்மையான இந்தியனுடைய நன்றியறிதலும், எல்லா ஆசிர்வாதங்களும், அவரையும் அவருடைய சகாக்களையும் அடைவதாக. ஆயினும் இஃதொரு தனிவிஷயம்—தியஸாபிகல் சங்கத்திற் சேருவதென்பது வேறொரு விஷயமாகும். ஒருவர் ஏதாவதொன்றைச்சொன்னால், அதைப் பாராட்டுவது, மதிப்பது, பிரியப்படுவது ஒரு விஷயம்; அதைச் சிறிதும் யோசித்துப் பாராமலும், கண்டனம் செய்யாமலும், தீர அலசிப் பார்க்காமலும் அப்படியே ஒப்புக்கொண்டுவிடுவதானது முற்றிலும் மாறுபட்ட விஷயமாகும். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் நான் பெற்ற சில நன்மைகளுக்காக இத் தியஸாபிக் சங்கத்தார் மிகவும் உதவி செய்ததாக எங்கும் பிரஸ்தாபமிருந்துவருகிறது. இதில் ஒவ்வொருவார்த்தையும் தப்பென்று நான் உங்களுக்குச் சொல்லவேண்டியிருக்கிறது; ஒவ்வொரு வார்த்தையும் பொய்யேயாகும். இவ்வுலகத்திலே பல்வேறு அபிப்பிராயங்களிடத்தும் தயாள எண்ணம் வகித்தல், அனுதாபங்கொள்ளல் முதலியவைகளைப் பற்றி எங்கும் வெகுபிரமாதமான பிரசங்கங்களைக் கேட்கிறோம். இது மிகவும் மேன்மையானதே; ஆயினும் உண்மையில், ஒருவன் தான் சொல்லும் எல்லா வார்த்தைகளையும் மற்றொருவன் நம்பும்வரையில், அவனிடம் மிகவும் தயாளமாயிருக்கிறான்; மாறான அபிப்பிராயங்கொள்ளத் துணிந்தாலோ, அந்த க்ஷணமே எல்லா தயாள குணமும் பறந்துவிடும்; அந்த அனுதாபமும் அன்பும் மறைந்து போகும்.

பிறகு, தங்களிஷ்டம்போல் கோடரியைத் தீட்டும் வேறு சிலர் இருக்கின்றனர்; எந்நாட்டிலேனும் அதற்குத் தடங்கல் விளைக்கக்கூடிய ஏதாவதொரு சம்பவம் நேரிட்டு விட்டாலோ அவர்களின் உள்ளம் எரிகின்றது; அளவற்ற குரோதம் உண்டாகின்றது; இன்னது செய்வதென்று அவர்களுக்குத் தோற்றவில்லை. இந்தியர் தங்கள் வீடுகளைத் திருத்திக்கொள்ள முயலுகிறார்களென்றால், இந்தக் கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்காவதென்ன? இந்தியர் தங்களாலியன்ற அளவு தாங்களே சீர்திருத்தம் செய்துகொள்ள முயலுகிறார்களென்றால், இந்தப் பிரம்ம ஸமாஜத்தாருக்கும் மற்றச் சீர்திருத்தக்காரர்களுக்கும் விளையும் தீங்கென்ன? ஏன் அவர்கள் எதிர்த்து நிற்கவேண்டும்? ஏன் இவ்வியக்கங்களுக்கு அவர்கள் மிகவும் விரோதிகளாயிருக்கவேண்டும்? ஏன்? ஏன் என்றே கேட்கிறேன்! ஏனென்றாவது எப்படியென்றாவது கேட்கக் கூடாதபடி அவ்வளவு கொடுமையானதாய் அவர்களுடைய பொறாமையும் பகைமையும் இருப்பதாக எனக்குத் தோற்றுகிறது. நான்கு வருஷங்களுக்கு முன்னால், எவருமறியாத ஒரு எளிய துணையற்ற சன்னியாசியான நான் ஸமுத்திரங்களைக் கடந்து வெகு தூரத்திற்கப்பாலுள்ள அமெரிக்காவுக்குப் போகுங்காலத்தில், எனக்கெவ்வித சிபார்சும் இல்லாமையாலும், அன்றி அத்தேசத்தில் உதவி புரியக்கூடிய நண்பர்கள் எவருமில்லாதபடியாலும், தியஸாபிக் சங்கத்துத் தலைவரின் உதவியைச் சற்று எதிர்பார்த்தேன். அவர் அமெரிக்க தேசத்தினராதலாலும், இந்தியாவின்மேல் பற்றுள்ளவரென நான் நினைத்ததாலும், அந்நாட்டிலுள்ள யாராவது சிலரிடம் என்னை அறிமுகம் செய்து ஒரு சிபார்சுக் கடிதம் கொடுக்கும்படி வேண்டினேன். அதற்கு அவர் "நீர் தியஸாபிக் சங்கத்தில் சேருவீரா?" என்று என்னை வினவினர்.

முடியாதெனக் கூறினேன். "உங்களது கொள்கைகளை யான் பெரும்பாலும் நம்பவில்லை யாதலால் எங்ஙனம் உங்களுடன் சேரமுடியும்?" என்றேன். "அப்படியாயின், யான் உமக்கு ஏதும் செய்ய இயலாதிருப்பது பற்றி மிகவும் வருந்துகிறேன்" என்று சொல்லி மறுத்துவிட்டார். இதுதானே எனக்கிழைத்த ஒத்தாசை? ஈண்டிருக்கும் எனது தியஸாபிக் நண்பர்கள் இதற்கு விடை யளிக்கட்டும். பிறகு, சென்னையிலுள்ள சில நண்பர்களின் உதவியால் நான் அமெரிக்காவுக்குச் சென்றது நீங்கள் யாவருமறிந்த விஷயமே. அநேகமாய் அவர்களெல்லோரும் இங்கு விஜயம் செய்திருக்கின்றனர். ஆனால் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் மாத்திரம் இன்று வரவில்லை. அவருக்கு யான் மிகவும் அதிகமான நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன். அவர் மிக்க விவேகமுடையவர்; எனதாருயிர் நண்பர்களுள் ஒருவர்; உண்மைச் சிநேகிதர்; இந்தியாவின் உண்மைப் புதல்வருமாவர். ஸர்வ மத ஸபை ஆரம்பமாவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு நான் அமெரிக்காவை யடைந்தேன். என்னிடமிருந்த பணம் மிகவும் குறைவாகவே யிருந்ததால் சீக்கிரம் செலவாய்விட்டது. குளிர்காலமும் நெருங்கிற்று; என்னிடமோ மெல்லிய கோடை காலத்து உடைகளிற் சிலவே இருந்தன; குளிர் மிகுந்த அச்சமயம் இன்னது செய்வதென்று எனக்குப் புலப்படவில்லை. யாசகம் செய்வதெனத் தெருக்களிற் சென்றிருப்பேனாயின், சிறைவாசமே எனது முடிவாயிருந்திருக்கும். எனதுகையில் கடைசியாக இருந்த சில ரூபாய்களைக் கொண்டு இங்கு சென்னையிலுள்ள எனது நண்பர்களுக்கு ஒரு தந்தியடித்தேன். இச்செய்தியைத் தியஸாபிக் ஸபையார் அறிந்தார்களோ இல்லையோ, "அப்பா, இப்பொழுது தொலைந்துவிடும் பேய்; கடவுள் நம்மை ரக்ஷிப்பா

ராக'' என்று கூறலாயினர். எனது கஷ்டத்தைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டனர். இது தானே எனக்குச் செய்யும் உபகாரம்? என் தியஸாபிக் நண்பர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள்? இச் சமாசாரங்களை யெல்லாம் நான் சொல்லியிருக்க மாட்டேன்; ஆனால் எனது சகோதரர்கள் அறிய விரும்பியதனாலே அவை வெளிவந்தே தீர வேண்டும். இவற்றைப்பற்றிக் கடந்த மூன்று வருஷங்களாக நான் வாயே திறக்கவில்லை. மௌனமே எனது முக்கிய கொள்கையா யிருந்தது. ஆனாலும் இன்று அவை அம்பலத்துக்கு வந்தே தீரவேண்டும். இம்மட்டோ? ஸர்வ மத ஸபை யில் அவர்களிற் சிலரை யான் கண்டேன். அவர்களை நெருங்கிப்பேச விரும்பினேன். அப்பொழுது அவர்கள் முகத்திற் காணப்பட்ட கொடூரமான பார்வையானது இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது! "தேவர்கள் கூடும் இடத்தில், இவ்வற்பப் புழுவிற்கு என்னவேலை?'' என்று கேட்பதுபோல் தோன்றிற்று! இதுதான் ஒரு வேளை எனக்கு அவர்கள் செய்த உதவியா யிருக்கக் கூடுமோ?

ஸர்வ மத ஸபை யில் எப்படியோ எனக்குச் சற்று ஆதரவு கிடைத்ததும், மிகவும் அருமையான வேலை செய்யக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆனால், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இத்தியஸாபிக் ஸபையார் என்னை வீழ்த்திவிட முயற்சித்து வந்தனர் என்பது உண்மை. அச்சபையின் அங்கத்தினர் எவரும் எனது பிரசங்கங்களைக் கேட்கக் கூடாதென அறிவிக்கப்பட் டிருந்தனர். காரணம் யாதெனில், அவர்களுடைய ஸபையின் அந்தரங்கச் சட்ட திட்டங்களிற் கண்டிருக்கும் பிரகாரம், அவ்வந்தரங்கப் பகுதியிற் சேர்ந்துள்ள அங்கத்தினர் எவராயினும், அவர்களின் (மஹாத்மாக்கள்) குதுமி மோரியா விட

மிருந்து மாத்திரமே எவ்வித போதனைகளையும் பெற வேண்டு மென்பதாம்! இம் மஹாத்மாக்கள் உருவமற்ற வர்க ளென்றாலும், அவர்களின் பிரதிநிதிகளாக கனம் ஜட்ஜ் அவர்களும் பெஸண்ட் அம்மாளும் இருக்கின்றனர். ஆகவே, அவ்வந்தரங்கப் பகுதியில் சேருவதென்றால், ஒரு வன் தனதெல்லாச் சுதந்திரத்தையும் ஒப்படைத்து விடு தல் என்று பொருள்படுகிறது. நிச்சயமாக இப்படிப்பட்ட காரிய மெதுவும் நான் செய்ய முடியாது; யாரேனும் இங் ஙனம் ஏதாவது செய்தாலும், அவனை யொரு இந்து வென்று அழைக்கவும் மாட்டேன். கனம் ஜட்ஜின்பேரில் எனக்கு மிகுந்த விசுவாஸம் உண்டு. அவர் மிகவும் மேலா னவராயும், நிதானமுள்ளவராயும், கபடமற்ற வெள்ளை மனத்தினராயும் இருந்தார். தவிர, தியஸாபிக் ஸபையினர் இவரைப்போன்ற வேறு தகுந்த பிரதிநிதியை எக்காலத் தும் பெற்றிருக்கவு மில்லை. பெஸண்ட் அம்மாளும் இவரு மாக, தம் தம் மஹாத்மாவே சரியானது என்று தங்க ளுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த விஷயத்தைப் பற்றி நான் எவ்வித முடிவும் சொல்வதற்கில்லை. இதில் மிகவும் ஆச்சரியமான சங்கதி எதுவென்றால், இருவரும் ஒரே மஹாத்மாவைத் தம்முடையதே என்று வாதாடி யதேயாகும். இதன் உண்மையைக் கடவுளேயறிவர். அவரே நியாயாதிபதி; இருகக்ஷியும் சமதையா யிருக்கும் காலத்தில், வேறு யாரால் நியாயங்கூற முடியும்!

அமெரிக்கா முழுவதும் அவர்கள் எனது வேலைக்கு அடிகோலியது இப்படித்தான்! எனக்கு மற்றொரு தடை யாயிருந்த கிறிஸ்தவப் பாதிரிமார்களோடு இவர்கள் சேர்ந் தனர். இக்கிறிஸ்தவப் பாதிரிமார்கள் எனக்கு விரோத மாக நிற்கவில்லை என்று சொல்வரேல், அவ்வொவ்வொரு வார்த்தையும் பொய்யென்பது நிச்சயம். அவர்கள்

விளைத்த இன்னல்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்றாய்ப் புலப்படுகின்றன. அன்னிய நாட்டிலே நான் ஒரு எளியனாய்த் துணையற்றிருந்தகாலை, இவர்கள் நகரத்துக்கு நகரம் சென்று என்னைப்பற்றி இழிவாகத் தூற்றி வந்தனர். நான் சென்று தங்கின ஒவ்வொரு வீட்டிலிருந்தும் என்னைத் துரத்திவிடத் தங்களா லியன்றவரை முயற்சித்தனர். அங்கே என்னுடன் நண்பராய்ச் சேர்ந்த ஒவ்வொருவரையும் என்னிடம் விரோதங்கொள்ளுமாறு எல்லா வழிகளிலும் முயன்றனர். இவ்விதம் பலவழிகளிலும் வேலைசெய்து என்னை வேறுவழியின்றிப் பட்டினியாக்கவும் முயற்சி செய்தனரென்றால் வேறென்னவேண்டும்! இவ்விதவேலையில் எனக்கு விரோதியாக இவர்களுடன் சேர்ந்துகொண்ட என் சொந்த நாட்டுச் சகோதரர் ஒருவரைப்பற்றி இங்கு வெளியிடுவதற்குத்தான் எனக்கு வருத்த முண்டாகிறது. அவரோ இந்தியாவிலுள்ள சீர்திருத்தச் சபையின் தலைவராவர். யான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை யென்பதை என்னிடமுள்ள அத்தாக்ஷிகளைக் கொண்டு ருஜூப்பித்துக் காட்ட என்னால் முடியும். நான் குறிப்பிடுகிற இப்பெரியார் "கிறிஸ்து இந்தியாவுக்கு வந்திருக்கிறார்" என்ற மந்திரத்தைச் சதா உருச்செய்துகொண்டிருக்கிறார்! கிறிஸ்து இந்தியாவில் வருவதற்கு வழி இதுவேயோ வென்று அவரை நான் கேட்கிறேன். இந்தியாவைச் சீர்திருத்தும் வழி இதுதானோ? என் சிறு வயது முதற்கொண்டே இப்பிரபுவை யான் அறிவேன். என துயர்ந்த நண்பர்களுள் ஒருவராகவும் இருந்தார். வெகு நாட்களாய் என் நாட்டுச் சகோதரர் ஒருவரையும் பார்க்காமலிருந்து இவரை யான் அங்கு சந்தித்தபோது நான் அளவற்ற சந்தோஷங் கொண்டேன். அதற்குப் பதிலாய் அவரிடமிருந்து நான் பெற்ற பரிகாரம் இதுவேயாகும்.

என்றையதினம் ஸர்வ மத ஸபை யானது என்னைப் புகழ்ந்ததோ, அன்றே சிகாகோவிலுள்ள எல்லா ஜனங் களும் என்னைத் தெரிந்துகொண்டனர். அந்நாள் முதற் கொண்டு இவருடைய மனப்பான்மை மாறிவிட்டது; ரகஸியமாகத் தம்மாற் கூடிய அளவு எனக்குத் தீங்கு விளைக்க முயற்சித்தார். கிறிஸ்து இந்தியாவுக்கு வரப் போகும் வழி இதுதானே? கிறிஸ்து நாதரின் அடிகளில் இருபத்து நான்கு வருடங்கள் உட்கார்ந்து கற்ற படிப் பினை இஃதேயோ? கிறிஸ்தவ மதமும், கிறிஸ்தவ சக்தி யுமே இந்திய ஜனங்களை முன்னேற்றப் போகிறதென்று நமது சீர்திருத்தக்காரர்கள் முழங்குகின்றனர்! முன் னேற்றத்திற்கு இப்பெரியார் செய்த இதுவேதான் உற்ற வழிபோலும்! இவரை ஓர் உதாரண புருஷராய்க் கொண் டால் முன்னேற்றம் எவ்வளவு அழகாய் ஏற்படு மென் பதை நீங்களே யோசியுங்கள்.

இன்னும் ஒருவார்த்தை—இந்த அறிவாளிகளாகிய சீர்திருத்தக்காரர்களால் நடத்தப்பெறும் பத்திரிகையைப் படித்தேன். அதில் யான் ஒரு சூத்திரன் என்றும், ஒரு சூத்திரன் சன்னியாசியாவதற்கு என்ன உரிமையிருக்கிற தென்றும் ஆக்ஷேபிக்கப் பட்டிருக்கிறேன். இதற்கு யான் கூறும் மறுமொழி யென்ன வென்றால், என்னுடைய ஜாதி சூத்திர ஜாதியானால், பின் அப்பத்திராதிபரின் ஜாதி நீச ஜாதியாகும். ஒவ்வொரு பிராம்மணனும் தினந் தோறும் "யமாய தர்ம ராஜாய சித்ரகுப்தாய வைநம:" என்ற மந்திரத்துடன் யாருடைய பாதங்களில் சரணமடை கின்றானோ அவருடைய வழியைச் சேர்ந்தவன் நான். ஒவ் வொரு மனிதனுடைய நல்வினை தீவினைகளையும் அவ்வப் போது பதிவுசெய்து வருபவரும், தர்மங்களுக் கெல்லாம் அதிதேவதையுமான யமதர்ம ராஜனின் அடிகளை வணங்கு

பவன் நான். க்ஷத்திரியர்களெல்லாம் யாருடைய வம்சத்தில் தோன்றியிருக்கிறார்களோ, அவர் பாதங்களிற் பணிபவன் நான். உங்கள் காவியங்களிலேனும் புராண இதிஹாஸங்களிலேனும் நம்பிக்கை சிறிதளவேனும் இருக்குமானல், என் வம்சத்தார், தாங்கள் பண்டைநாளிற் செய்த அரும் பெரும் காரியங்கள் ஒரு புறமிருக்க, இந்தியாவிற் பாதியை அநேக நூற்றாண்டுகள் செங்கோலோய்ச்சி வந்துள ரென்பதை இவ்வங்காளச் சீர்திருத்தக்காரர்கள் உணரட்டும்! என்னுடைய ஜாதியானது மதிக்கப்படாது புறக்கணிக்கப் படுமாயின், பின் இக்கால இந்திய நாகரிகத்தின் பெருமை யென்ன இருக்கிறது?

இந்நாகரிக வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் காரணபுருஷர்களாய்த் தோன்றி நலம்புரிந்த சீரியோர் அனைவரும் எனது ஜாதியிலேயே தோன்றி யுள்ளனர். வங்காளத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டாலும், தத்துவ ஞானத்தில் எவரினும் மேம்பட்டவரும், கவிகளுள் சிரேஷ்டரும், சரித்திர மெழுதுவதில் வல்லமை பெற்றவரும், புராதன வஸ்து சாஸ்திரங்களை ஆராய்ந்துணர்வதில் சிறந்தவரும், முதன்மை பெற்ற மதாசாரியர்களும், ஆக இவர்களெல்லோரும் எனது வம்சத்திலன்றோ தோன்றி யிருக்கின்றனர்! நவீன சாஸ்திர ஆராய்ச்சிக் காரர்களுள் முதன்மை பெற்றவர், இந்தியாவில், எனது வம்சத்திலேயே தோன்றியுள்ளார்! என்னுடைய ஜாதி சூத்திரஜாதியா! பின் இப்பத்திராதிபர், மறுமுறையும் கூறுகிறேன், பறையனவர்! குற்றங்கூற முன் வந்த இவர் நமது சரித்திரங்களைச் சற்று ஆராய்ந் துணர்ந்திருத்தல் வேண்டும். பிராம்மண க்ஷத்திரிய வைசியர்களுள் எவருக்கும், சன்னியாச ஆசிரமம் ஏற்க உரிமை உண்டென்பதையும், இம் மூவருணத்தினர்க்கும் வேதங்களிற் சமமான உரிமையுண்டு என்பதையும் அவர் உணர்ந்திருக்க

வேண்டும். இடையில் சிறு உதாரணத்திற்காக இதை யான் எடுத்துச் சொன்னேனென்றாலும், என்னைச் சூத்திரனென்று அவர்கள் அழைத்து விட்டதால் எனக்கு எவ்வழியிலும் குறைவு நேரிட்டுவிடாது. முன்னோர்கள் ஏழைகளுக்கிழைத்த கொடுமைகளுக்குச் சற்றுப் பரிகாரமாயிருக்குமென எண்ணியே இங்கே இதைச் சொல்ல நேர்ந்தது. நான் ஒரு பறையனாகப் பிறந்திருப்பேனானால், இன்னும் அதிகமான சந்தோஷத்தையே யடைவேன். ஏனென்றால், தாம் பிராம்மணருக்கெல்லாம் பிராம்மணராயிருந்தும் ஒரு பறையனுடைய இல்லத்தைச் சுத்தம் செய்ய விரும்பிய ஓர் மஹானுபாவரின் சீடன் நான். உண்மையில், அப்பறையன் அதற்குச் சம்மதிக்கான். ஓர் பிராம்மண சன்னியாசி தனது வீட்டைச் சுத்தம் செய்வதைப் பார்க்க அவன் எவ்வாறு சம்மதிப்பான்? ஆகவே இப்பிராம்மண சன்னியாசி நடுநிசியில் எழுந்து எவருமறியாதபடி அப்பறையனின் வீட்டினுட் புகுந்து மலங் கழிக்கும் கூடம் முதலான இடங்களைச் சுத்தம் செய்து அவ்விடத்தைத் தம் தலைமயிரைக் கொண்டு துடைத்தார். இவ்விதம் ஒருதரந்தானா? தம்மை எளியோர்க்கும் அடியனாய் ஆக்கிக்கொள்ளுவான் கருதிப் பலதரம் அவர் அம்மாதிரிச் செய்தார். அம்மஹானுபாவரின் பாதங்களையே சிறியோனாகிய யான் சதா என் தலைமீது தாங்கி நிற்கின்றேன்; அவரே என்னுடைய நாதர்; அவ்வீரரைப் பின்பற்றியே நான் நடப்பேன். இவ்விதம் ஓர் உண்மை இந்துவானவன், அன்னிய செல்வாக்குகளெதையும் நாடாது விட்டு, தன்னுடைய சொந்த நடத்தையாலேயே முதலில் எல்லார்க்குமடியனாகி, அதன் பின்னரே, தன்னையும், தன் நாட்டு ஜனங்களையும் உயர்த்தவேண்டும். இருபது வருஷத்து மேற்கத்திய நாகரிகமோ, தன் சொந்த சிநேகன்

ஒருவனை, தன் வருவாய்க்குத் தடையாக இருப்பானே வென்று தான் எண்ணிய காரணத்தினாலே, அன்னிய நாட்டில் பட்டினிபோட முயற்சிக்கும் அம்மனிதனின்செய் கையை விளக்குகிறது! முன் சொன்ன மற்றொரு உதா ரணமோ, உண்மையான வைதிக தர்மத்தால் தன்னாட்டு மக்கட்குண்டாகும் பயனை விளக்குகிறது. இச்சீர்திருத்தக் காரர்களில் ஒவ்வொருவரும், எல்லோருக்கும் ஊழியம் செய்யவும், ஒரு பறையனுடைய வீட்டைச் சுத்தம் செய்ய வும் தயாராயிருக்கட்டும்! அப்பொழுதே அப்படிப்பட்ட ஒருவரின் அடிகளில் உட்கார்ந்து நான் ஏதாவது கற்றுக் கொள்வேனேயன்றி அதற்கு முன்னால் முடியாது. அடுக் கடுக்காய்க் கணக்கின்றிப் பேசும் பெரிய பேச்சுக்களைவிட ஒரு துளிக் காரியமேனும் செய்தலே மேலானது.

இப்பொழுது சென்னையிலுள்ள சீர்திருத்தச் சபையா ரைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுகிறேன். அவர்கள் என்னிடம் மிகவும் பிரியமாய் இருந்து வந்திருக்கின்றனர். மிகவும் அன்பாக என்னிடம் பேசி, வங்காளச் சீர்திருத் தக்காரர்களுக்கும் தங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை எனக்கு எடுத்துரைத்தனர். அதை நான் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்கிறேன். இதுசமயம் வங்காள மிருக்கும் நிலைமைக்கும் சென்னைக்கும் மிகுந்த வித்தியாசம் இருக் கிறதென்று நான் அடிக்கடிச் சொல்லிவந்திருப்பது உங்க ளிற் பெரும்பாலோர்க்கு நினைவிருக்கும். ஒருசமயம் ஒரு முகமாகவும், மற்றொரு சமயம் அதற்கு நேரெதிர்முகமாக வும் மாறி மாறி இயங்குவிக்கும் வங்காளச் சீர்திருத்தங் களைப் போன்றவை சென்னையில் ஏற்படுத்தப்படவில்லை. இங்கே மிகவும் மெதுவான, ஆனால் ஸ்திரமான முன்னேற் றம் ஏற்பட்டு வருகிறது. சீர்திருத்தத்தில் வளர்ச்சி தோன்றுகின்றதேயன்றிப் பிற்போக்கில்லை. ஒருவாறு வங்

காளச் சீர்திருத்தங்களால் பழைய பழக்க வழக்கங்கள் யாவும் பிசகானவையென்று கருதிப் புறக்கணிக்கப்பட்டிருக்க, ஈண்டு சென்னையிலோ, எல்லாச் சீர்திருத்தங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் விருத்தி யேற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விஷயத்தில் சென்னைச் சீர்திருத்தச் சபைகளைச் சேர்ந்தோர், தங்களுக்கும் வங்காளத் திருத்தக்காரர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக்காட்டுவதை நான் முற்றிலும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், ஒரு விஷயம் இவர்கள் உணர்ந்தாரில்லை: இவர்களிற் சிலர் மெதுவாக என்னைத் தங்களுடன்சேர்ந்து விடும்படிச் செய்ய முயற்சிக்கிறார்களென்று எனக்குத் தோன்றுகிறது! அவ்விதம் முயலுவது மிக விசித்திரமான காரியமே. தன்னுடைய வாழ்நாட்களில் பதினான்கு வருஷ காலம் பட்டினியையே துணையாய்க் கொண்டும், நாளைக்கு என்ன சாப்பிடுவது, எங்கே உறங்குவது என்பதுங்கூடக் கருதாமலும் காலங்கழித்து வந்த ஒருவனைத் திருப்பிவிடுவதென்பது இவ்வளவு லேசாய் முடியக்கூடிய காரியமன்று. அடுத்த வேளைக்குச் சாப்பாடு எங்கிருந்து வரும் என்பதுகூடத் தெரியாமலும் அநேகமாய்த் துணியே யில்லாது தேர்மாமீடரில் பூஜ்யத்துக்குக் கீழ் முப்பது டிக்கிரி வரையில் காட்டக்கூடிய அவ்வளவு அதிக குளிருள்ள பிரதேசத்தில் வசிக்கத் துணிந்த ஒருவனை மெதுவாய்த் திருப்பிவிடுவதென்பது இங்கேமுடியக்கூடிய காரியமல்ல. என் சொந்த வழியிலே எனக்குச் சிறிது விருப்பம் உண்டு; அனுபவமும் கொஞ்சம் இருக்கிறது. இவ்வுலகத்துக்கு உபயோகமான செய்தி என்னிடம் ஒன்றிருக்கிறது; அதை நான் சிறிதளவும் அஞ்சாமலும், இதன் பயனாய் எதிர்காலத்தில் என்ன விளைந்துவிடுமோ வென்ற ஏக்கமின்றியும் தைரியமாய் வெளியிடுவேன். இச் சீர்திருத்தக்காரர்களுக்கு ஒன்று சொல்லு

கிறேன். இவர்களுள் எவரையும் விட நான் ஒரு பெரிய திருத்தக்காரனுவேன். ஏனெனில், இவர்கள் விரும்பும் சீர்திருத்தங்க ளெல்லாம் மிகவும் அற்ப அளவே யுடையன வாயிருக்க, நான் விரும்புவது அடிமுதல் உச்சி வரையில் சீராக்கக்கூடிய ஓர் பெரிய சீர்திருத்தமாகும். அனுசரிக்கும் முறையில்தான் வித்தியாசம் இருக்கிறது. அவர்களுடையது அழிவுமுறை; என்னுடையதோ ஆக்கம் அல்லது அமைப்பு முறையாகும். திருத்துவதில் எனக்கு நம்பிக்கை இல்லை; வளர்ச்சியில் தான் எனக்கு நம்பிக்கை யுண்டாகிறது. கடவுளைப்போல் உன்னத ஸ்தானத்தில் நின்றுகொண்டு "நீ இவ்விதமே செய்யவேண்டும்; அவ்வாறு செய்யக்கூடாது" என்று ஜனசமூகத்திற்குக் கட்டளையிட நான் துணிய மாட்டேன். இராமபிரான் இலங்கைக் கிட்ட அணையில் தானும் பங்கெடுத்துக்கொண்டு, தனது சிறு சரீரத்தால் அற்ப அளவு மண் தூசியைக் கொண்டு சேர்த்து அளவற்ற ஆனந்தங்கொண்ட ஓர் சிறு அணிலைப்போலவே நானும் என்னுற்கூடிய அளவு பணி இயற்ற விரும்புகின்றேன். இதுவே எனது கொள்கை. அதி ஆச்சரியமான இத்தேசீய இயந்திரம் நீண்ட காலமாய் வேலை செய்து கொண்டிருக்கிறது! நம்முன்னல் இத்தேசிய வாழ்வென்னும் நதியானது வெகு காலமாக ஓடிக்கொண்டிருக்கிறது! இதை நல்லதல்ல வென்றுரைக்க எவரே துணிவர்? அல்லது இனியெப்படி அஃது ஓடுமென்றறியவாவது வெளியிடவாவது எவரால் கூடும்? அவ்வப்போது தற்செயலாய் நிகழும் ஆயிரக்கணக்கான சம்பவங்களால் தூண்டப்பட்டு, சில சமயங்களில் மந்தமாயும் மற்றக்காலங்களில் வெகு விசையாயும் இருந்து வருகிறது. அதைத் தங்களிஷ்டப்படி இயங்குவிக்க எவருக்குத் துணிவு உண்டாகும்? கீதையில் சொல்லப்பட்டிருக்

கும் பிரகாரம் நம்மாலானதைச் செய்துவிட்டு அத்துடன் திருப்தி யடைவதே நமது கடன். எரியும் நெருப்புக்கு விறகிடுவது போல, அதற்கு வேண்டிய காரணங் களைச் செய்தலே நமது வேலை; அது தானே வளர்ச்சி பெறும்.

நமது ஜன சமூகத்தில் ஏராளமான கொடுமைகள் இருப்பது உண்மையே; அப்படியே மற்றைய எல்லாச் சமூகங்களிடத்தும் இருந்தே வருகின்றன. ஈண்டு, சில வேளைகளில் விதவைகளின் கண்களினின்றும் ஊறும் தண்ணீரால் பூமி நனைகிறதென்றால், அங்கே, மேனாடுகளிலோ விவாக மாகாதவர்கள் விடும் பெருமூச்சானது ஆகாயத்தையே விஷமாக்கி விடுகிறது. இங்கு வறுமைப் பிணியானது ஜனங்களை வாட்டுகின்றது; அங்கோ, தங்கள் பெருமித வாழ்க்கையினா லேற்பட்ட களைப்பினால் அவர்கள் அவதிப்படுகின்றனர். இங்கே வயிற்றுக்கில்லாத கொடுமையால் மனிதர் தற்கொலைசெய்துகொள்ள விரும்புகின்றனர்; அங்கேயோ அளவு கடந்த சாப்பாட்டின் பயனாய்த் தற்கொலை செய்துகொள்கின்றனர். தேகத்திலுள்ள கீல் வாதத்தைப்போல், இத்தகைய கொடுமைகள் எல்லாவிடத்தும் இருந்துவருகின்றன. காலிலுள்ள வாதத்தை மருந்து முதலியவைகளால் போக்குவீராயின், அது உடனே தலைக்கு வந்துவிடுகிறது. அங்கிருந்து விரட்டினால் இன்னொரு இடத்துக்குச் சென்றுவிடும். இவ்விதம் ஓரிடமிருந்து மற்றோரிடத்துக்குத் துரத்தலாமே யொழிய அடியோடு ஒழித்துவிடுவதென்பது தியலாது. அறியாத சிறு பிள்ளைகளே அதைத் தாங்கள் சொஸ்தப்படுத்தி விடக் கூடுமெனவும், அதற்குத் தாங்கள் கருதும் வழியே மிகவும் சரியா மெனவும் நினைக்கின்றனர். நல்லது கெட்டது இவையிரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப்போல் எக்

காலத்தும் இணைபிரியாதவையென நமது அறிவு நூல்கள் கூறுகின்றன. நல்லது கிட்டினால், கூடவே கெட்டதும் கிட்டும்; கெட்டது வந்தால் நல்லதும் கூடவே வரும். கடலின் நீர்ப்பரப்பில் ஓர் அலை யுண்டாகுமானால், அதற்குக் காரணமாக அங்கே ஓரிடத்தில் தாழ்வும் உண்டாயிருக்கவேண்டுமல்லவா? வாழ்வென்பதே துன்பமாகும். ஒருவன் மூச்சு விடுவதாலேயே எண்ணிறந்த ஜீவஜந்துக்களைக் கொல்லுகிறான்; அவ்வாறு சில ஜந்துக்களையேனும் கொல்லாது ஒரு மூச்சுக்கூட விடமுடியாது. ஒருவன் ஒரு கவளம் உணவு உட்கொண்ட போதிலும், அவன் அதனால் பிற ஜந்துக்களை மோசம் செய்தவனே யாகிறான். இது தான் உலக நடை? இது உண்மையானதே. ஆகவே, துன்பங்களைப் போக்கிவிடவேண்டுமென்று நாம் எவ்வளவு பிரமாதமாகப் பேசினபோதிலும், அவையாவும் வீண் வார்த்தைகளே யன்றி உண்மையில் ஒன்றும் நடவாது. துன்பங்களை யொழிக்கும் விஷயத்தில் ஒவ்வொருவரும் இதை நன்றாய் உணரவேண்டுவ தவசியம். அப்பொழுதே நம்மிடமுள்ள குருட்டுத்தனமான பிடிவாதம் நீங்கி நாம் சாந்தமடைவோம். எங்கெங்கே குருட்டுத்தனமான பிடிவாதங்களைக்கொண்ட சீர்திருத்தக்காரர்கள் இருந்தனரோ அங்கெல்லாம் அவர்கள் தங்கள் காரியத்திற் கொஞ்சமேனும் சித்தி யடையவில்லை யென்பதைச் சரித்திரங்கள் நன்றாய்க் காட்டுகின்றன. அமெரிக்கா தேசத்தில் அடிமைத்தனத்தைப் போக்குவதற்காக ஏற்பட்ட ஓர் யுத்தத்தைவிடப் பெரியதொரு சுதந்திரப் போரை யூகிப்பதும் சாத்தியமில்லை. அது உங்களெல்லோருக்கும் தெரிந்ததே. அதனால் விளைந்த பயன் என்ன? முன்னிருந்ததைவிட நூறு மடங்கு கேவலமான நிலையிலன்றோ இன்று அவ்வடிமைகள் இருக்கின்றனர்? முன்பு இவ்வடிமை நீக்ரோக்கள் (ஆடு

மாடுகளைப்போல்) யாருடையவேனும் சொத்துக்களா யிருந்துவந்தனர். ஆகவே அவர்கள் தங்கள் எஜமானர் களால் அழிந்துபோகா வண்ணம் பார்க்கப்பட்டுவந்தனர். இன்றைக்கோ அவர்கள் யாருடைய சொத்தாகவும் இல்லை. அவர்களின் உயிருக்கு மதிப்பென்பது கிடையாது. வெறும் முகாந்திரங்களைக் கொண்டு உயிருடன்கொளுத்தப் படுகின்றனர். அவர்களின் கொலைகளுக்குச் சட்டமுமில்லை, கேள்வி முறையுமில்லை. ஏனென்றால், அவர்கள் கருப்புத் தோலையுடைய 'நிக்கர்கள்.' அவர்கள் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்! மிருகங்கள் கூட ஆகமாட்டார் கள்! மேற்கண்ட குருட்டுப் பிடிவாதமான கட்டாய விதி களால் கொடுமைகளை யொழிக்க முயலுவதன் பயனுய் விளையும் பலன் இதுவே. நன்மை செய்யும் நற்கருத்தோ டெனினும், இவ்விதப் பிடிவாத நியதிகளை யனுஷ்டித்த எல்லா இயக்கங்களின் பயனும் இதுவே யென்பதைச் சரித்திரம் தெளிவாய்க் காட்டும். நான் இதைப் பார்த் திருக்கிறேன். என்சொந்த அனுபவமே எனக்கு இதைப் போதித்திருக்கிறது. கண்டன முறையைக்கொண்ட எந் தச் சீர்திருத்தச் சபையாருடனும் யான் சேர ஒருப் படேன். கண்டனம் எதற்காக? ஒவ்வொரு சமூகத் திலும் குறைகள் இருக்கின்றன வென்பது உண்மையே; இதையாவரும் அறிவர். ஒவ்வொரு குழந்தையுங்கூட மேடையில் நின்று வாக்குச் சாதுர்யமாய் இந்து சமூகத் தின் குறைகளைப் பற்றி மிக்க ஆர்வத்துடன் நமக்குப் பிரசிங்கித்தல் கூடும். ஊர் சுற்றித் திரியும் கல்வியறி வற்ற ஒவ்வொரு அன்னிய நாட்டினனும், தனது 'ரயில்வே' பிரயாணத்திலேயே இந்தியாவைக் கண்டு அதன் உண்மையான நிலைமையை அறிந்து கொண்டதாக எண் ணிக்கொண்டு, இந்தியாவிலுள்ள கொடுமைகளைப்பற்றி மிக

வும் சாமர்த்தியமாகப் பிரசங்கம் செய்கிறன். நாம் அதை ஒப்புக் கொள்ளுகிறேம். எவரும் குறைகளை எளிதில் எடுத்துக் காட்டி விடலாம். ஆனல் அக்குறைகளினின்றும் நீங்கவொரு உபாயம் தேடிக் கொடுப்பவனே ஜன சமூகத்தின் தோழனுவான். தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒருவன், தனக்குத் தத்துவோபதேசம் செய்யவரும் ஒரு சாஸ்திரியிடம் "ஐயா! முதலில் என்னைத் தண்ணீரிலிருந்து கரையேற்றும்! மற்றவை பின்னுலாகட்டும்" என்றல்லவோ கத்துவான்? அதுபோல, இன்று நமது ஜனங்களும் "ஐயா! போதுமான பேச்சுக்கள், பிரசங்கங்கள் கேட்டாய் விட்டன! எங்களை வெளியேற்றக் கை கொடுக்கும் புண்ணியவான் எங்கே? உண்மையாக எங்கள் மேல் அன்புகொள்ளும் மனிதன் எங்கே? எங்கள் நிலையைக் கண்டு மனப் பூர்வமாய் இரங்கும் மனிதன் எங்கே?" என்றல்லவோ கேட்கின்றனர். ஏ! அப்படிப் பட்டவனன்றே தேவை! இதனுற்றுன் இச்சீர்திருத்த முறைகளிடம் நான் மாருன அபிப்பிராயம் கொண்டுள்ளேன். நூறுவருஷங்களாய் இவ்வியக்கங்கள் நடந்து வருகின்றன. அதனுல் விளைந்த பயன் என்ன? மிகவும் தூஷணைகளைக் கொண்டதும் எல்லாவற்றையுங் கண்டிக்கக் கூடியதுமான ஏராளமான புத்தகங்களும் கிரந்தங்களும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன! இதுதான் பயன். கடவுளே! இது ஏனே? வைதிகர்களை அவர்கள் குறைகூறினர், கண்டித்தனர், திட்டினுர்கள். வைதிகர்களும் சளைத்தாரில்லை; பதிலுக்குப் பதில் இவர்களைத் திட்டப் பின்வாங்கவில்லை. இதன் பயனுய் இந்திய ஜாதிக்கும், இந்திய நாட்டுக்குமே அவமானத்தை யுண்டாக்கக் கூடிய கிரந்தங்கள் ஒவ்வொரு இந்திய பாஷையிலும் ஏராளமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டுவிட்டன. இதுவா சீர்திருத்தம்? நமது நாட்டைப் பெரு

மைப்படுத்துவது இப்படித்தானோ? இது யாருடைய குற்றம்?

பின், யோசிக்கவேண்டிய இன்னொரு முக்கிய விஷயமும் உளது. இங்கே, இந்தியாவில், நாம் எக்காலத்தும் அரசர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறோம். நமது சட்டங்களை அரசர்களே நிறுவி வந்தனர். இப்பொழுதோ அத்தகைய அரசர்கள் இல்லை; முன்போல் நடத்துவதற்கு ஒருவரேனும் கிடையாது. நமது அரசாங்கத்திற்கோ துணிவு இல்லை. அது ஜனசமூகத்தின் அபிப்பிராயங்களை யொட்டியே வழிகளைத் திருத்திக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. எல்லாச் சமூகங்களும் முன்னேற்றத்தை யடையக் கூடிய ஒரு பலமான, தீவிர முடிவைத் தீர்மானித்து, ஜனசமூகமானது ஒரு பொதுவான அபிப்பிராயத்துக்கு வருவதென்பது சீக்கிரத்தில் முடியக்கூடிய காரியமல்ல. நீடித்த காலம் செல்லலாம்; அதுவரை நாம் காத்திருக்க வேண்டி யிருக்கிறது. சீர்திருத்தம் வேண்டுவோர் எங்கே? அதைக் கோரும் ஜனங்கள் யார்? முதலில் அவர்களைத் தயாராக்குங்கள். அஃதின்றிச் சிறுபான்மையோரின் கருத்துக்களை அமுலுக்குக் கொண்டு வருவதால் தீமையே விளையும். ஒரு சிலர் சில விஷயங்களைக் குறையெனக் கூறி விடுவதால், முழுச் சமூகமும் அவர்கள் சொற்படி நடக்கமுடியாது. இதுவே இந்தியாவில் காரியங்கள் நடைபெறாமைக்குக் காரணம். ஆகையால் முதலில் ஜனசமூகத்தைப் படிப்பியுங்கள். உள்ள நிலைமையைத் தெளிவாய் உணரும்படிச் செய்யுங்கள். பின் சபைகளைக் கூட்டுங்கள். அப்பொழுது நியதிகள் தானுய்த்தோன்றும். முதலில் பலத்தையடைய முயலுங்கள்; நியதிகளும் வழிகளும் தானாய் வரும். தம் சொந்தப் பொறுப்பில் சமூகத்தை நடத்தி வந்த அரசர்களை

யிழந்த நமக்குள் ஒரு திடமான, முடிவான பொது அபிப் பிராயம் உண்டாகச்செய்ய வேண்டும். ஆகையால் இச் சமூகச் சீர்திருத்தங்களுக்குக்கூட ஜனங்களைப் படிப்பிக்க வேண்டியது முதற்கடமையாகின்றது. சென்ற நூறு வருஷங்களில் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்பட்ட எல்லாச் சீர்திருத்தங்களும் வெறும் அலங்காரார்த்த மாகவே யிருக்கின்றன. இவற்றுள் ஒவ்வொன்றும் முத லிரண்டு உயர்ஜாதி ஜனங்களுக்கானவையே யொழிய ஏனை யோர்க்கு ஒரு சிறிதும் சம்பந்தங் கொண்டவையல்ல. உதாரணமாய் விதவா விவாகத்தை யெடுத்துக்கொண் டால், அது நூற்றுக்கு எழுபது பேருக்கு மேலுள்ள இந்திய ஸ்திரீகளுக்குக் கொஞ்சமும் சம்பந்தப்பட்டதல்ல. இவ்விஷயங்களெல்லாம் இந்தியாவிலுள்ள படித்த உயர்ந்த ஜாதி ஜனங்களுக்குத்தான் ஏற்பட்டவை. இவற்றால் ஏழைப் பொதுமக்கட்கேற்படும் நஷ்டங்களைக் கவனியுங் கள்! இவர்கள் செய்யும் ஒவ்வொரு முயற்சியும், தங்கள் சொந்தக் காரியங்களையே கவனிப்பதற்கும் அன்னிய நாட் டினரின் கண்ணுக் கேற்றாற்போல் தங்களைச் சீராக அழகு படுத்திக் கொள்வதற்குமே யாகும். இத்தகைய காரியங் கள் சமூகச் சீர்திருத்தங்களாகா. எல்லாவற்றிற்கும் அடிப் படையான மூலகாரணமாக வுள்ளவற்றை நீங்கள் அணுக வேண்டும். இதைத்தான் பூரணமான சீர்திருத்தமென நான் கூறுகிறேன். இவ்வடிப்படையான இடத்தில் தீயை மூட்டி மேல்நோக்கி எரியவிட்டு, ஒருமைப்பட்ட இந்திய ஜாதியாகச் செய்யுங்கள். இது அவ்வளவு சுலபமான காரிய மன்று; மிகவும் பிரமாதமான காரியமே. என்றாலும், என் வார்த்தைகளை மனதிற்கொள்ளுங்கள்; அவசரப்படாதீர் கள்; இப்பெருங் காரியம் பல நூற்றாண்டுகளாய் நம்முன் செய்யக் கிடக்கின்றது. இன்றைய தினம், முக்கியமாக

இப்பக்கங்களில், புத்த மதத்தையும் அதன் கொள்கைகளையும் பற்றிப் பிரமாதமாய்ப் பேசுவது ஒரு வழக்கமாய்ப் போய்விட்டது. தற்காலம் தோன்றும் நாட்டினது இழிந்த நிலைக்குக் காரணம் புத்தமதத்தின் பிற்காலத்திய இயக்கங்கள் தானென்பதை இவர்கள் உணருவதில்லை.

புத்தமதம் நமக்காக வைத்துப்போனதெல்லாம் இதுவே. புத்த மதத்தின் எழுச்சிகளையாவது அதன் வீழ்ச்சிகளையாவது என்றும் படித்துத் தெரிந்துகொள்ளாத மனிதர்களிற் சிலர் புத்தமதமானது அதனிடத்துள்ள அபூர்வ நீதிகளாலும் கௌதம புத்தரது ஆச்சரியகரமான சக்தியாலுமே பரவிற்றென்று எழுதியிருக்கும் சில புத்தகங்களை நீங்கள் படிக்கிறீர்கள். புத்தர் பெருமானிடம் எனக்கு அத்யந்த பக்தியும் மரியாதையும் உண்டு. ஆயினும் நான் சொல்வதைக் கவனியுங்கள். புத்த மதம் பரவியதற்கு அதனின் கொள்கைகள், அவருடைய சக்தி, இவைகளைவிட, அவர் உயிர்நீத்தபின் வெகு காலம் கழிந்து ஆங்காங்கு கட்டப்பட்ட பெரிய கோயில்களும், அவற்றுள் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரஹங்களும், நாட்டில் பலவிடத்தும் செய்துவந்த சிறப்பான கர்மானுஷ்டானங்களும் சடங்குகளுமே காரணங்களாகும். இந்தச் சிறப்பான கோயில்களும் வெளிச்சடங்குகளும் ஜனங்களின் மனதைக் கவர்ந்ததுபோல், நீண்டகாலமாய்த் தங்கள் தங்கள் வீடுகளில் தினந்தோறும் தேவர்களுக்கு ஆஹுதி கொடுக்க வேதமுறைப்படி அமைக்கப்பட்ட தங்களுடைய சிறு ஹோமகுண்டங்கள், அவ்வளவு திருப்தியையுண்டாக்கவில்லை. ஆகலின் ஜனங்கள் பழையனவிடுத்து நவீன முறையைக்கொண்டு, இவ்விதமே புத்த மதத்தினராக மாறினர். நாட்கள் ஆக ஆக யாவும் சீர் கெடலாயின. அவை முற்றிலும் துராசாரங்களாய் விட்டன. இதைப்பற்றி

இக்கூட்டத்தில் பேசவும் என்னால் கூடவில்லை. ஆனால் அதை யறியவிரும்புவோர் தென்னிந்தியாவிலுள்ள பெரிய கோவில்களிற் காணப்படும் சித்திரவேலைகளைப் போய்ப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். பிற்காலத்திய புத்த மதத்தினரிடமிருந்து நாம் பிதுரார்ஜிதமாய்ப் பெற்றதெல்லாம் இத்தன்மையதே. பிறகு பெரிய சீர்திருத்தக்காரர்களான ஸ்ரீசங்கராசாரியரும் அவரின் சீடர்களும் தோன்றினர். அவர் தோன்றியதுமுதல் இற்றைநாள்வரையும்இந்திய மக்களிடத்தே மறுபடியும் மெதுவாய்ப் பழைய வேதாந்த மதத்தின் புனிதமான, மாசில்லாத, பரிசுத்தத்தன்மை பரவி வருகின்றது. இப்பெரியோர்களுக்கும் நாட்டினிடத்திருந்த கொடுமைகள் நன்றாய்த் தெரியும்; எனினும், மக்களை யொருநாளும் அவர்கள் தூஷித்தாரில்லை. "உங்கள் முறைகளெல்லாம் முற்றும் பிசகானவை, நீங்கள் அவற்றை விட்டொழித்து விடவேண்டும்'' என்று இவர்கள் கண்டிக்கவில்லை ; ஒரு நாளும் இல்லை. இன்று டாக்டர் பரோஸ் என்ற எனது நண்பரொருவர் கிறிஸ்துவ மதமானது கிரேக்க ரோமன் மதானுஷ்டானங்களையும் அவற்றின் செல்வாக்குகளையும் முன்னூறு வருஷங்களுக்குள் மாற்றி விட்டதாகச் சொல்கிறாரென்று அறியலானேன். இவ்வார்த்தைகள், ஐரோப்பா, கிரீஸ், ரோம் முதலிய நாடுகளை நேரிற் கண்ட மனிதன் ஒருவனின் வார்த்தைகளல்லவென்பது நிச்சயம். கிரேக்க ரோமன் மதச்செல்வாக்குகள் அங்கு இன்றளவும் இருந்தே வருகின்றன. 'பிராடெஸ்டெண்டு' தேசங்களிற்கூட பழைய தெய்வங்களே வேறு பெயர்களைக்கொண்டு புது மாதிரியாக வருகின்றன. அவர்கள் பெயர்களை மாத்திரம் மாற்றிவிடுகிறார்கள். பழைய தேவர்கள் ஞானிகளாகவும், தேவிகள் மேரிகளாகவும் மாறிவிடுகின்றனர். முன்னே நடந்த அனுஷ்டானங்களும்,

சடங்குகளும் புதுப் பெயர் கொண்டு இன்றுநடக்கின்றன. பாண்டிபெக்ஸ் மாக்ஸிமஸ் என்ற பழைய பெயர்கூட இன்று அங்கே காணப்படுகிறது. ஆகவே, மதத் திருத்தங் களை முற்றிலும் மாற்றிப் புதிதாக அமைத்து விடுவதென் பது எந்நாளும் முடியாத காரியமென்பதை இது ருஜுப் பிக்கிறது. அவைகள் ஜனங்களால் சுலபமாய் ஒப்புக்கொள் ளப்படுவனவல்ல. சங்கராசாரியர் இதை யறிந்திருந்தார்; இராமானுஜரும் இதை யறிந்தவரே. ஆகையால் அவர்கள் செய்யக்கூடியதாயிருந்த ஒரேவழி யெதுவெனில், நடை முதலிலிருக்கும் மதாசாரங்களை மேலான நோக்கத்திற்கு மெதுவாகக் கொண்டு வருவதே யாகும். (முன் கண்ட) மற்றொரு (அடியோடு மாற்றும்) வழியைப் பின்பற்ற அவர்கள் முனைந்திருந்தால் அவர்கள் பெரிய கபடர்களா யிருந்திருப்பர். ஆத்மாவானது தாழ்ந்த நிலையிலிருந்து பல படிகளின் வழியாய் உயர்ந்தநிலைக் கேகும் வளர்ச்சி மார்க்கத்தையே ஒட்டியதாக அவர்களின் மதக்கோட்பாடு கள் இருந்தன. ஆதலால் அவைகள் அவசியமாகவும் உதவி யாயும் இருந்தன. இங்ஙனமிருக்கக் கண்டனம் செய்ய வேண்டிய அவசியம் என்ன?

விக்கிரஹ ஆராதனை மிகவும் தப்பான காரியமென்று சொல்வது இந்நாளில் ஸர்வ சாதாரணமாய் விட்டது; ஒவ் வொரு மனிதனும் சற்றும் நிதானித்துப் பார்க்காமல் அதை உடனே ஒப்புக்கொண்டு விடுகிறான். ஏன், நானும் ஒரு சமயம் அப்படி நினைத்ததுண்டு. இக் குற்றத்திற் காகவே, விக்கிரஹ ஆராதனையிலிருந்தே எல்லா மேன்மை களையும் அடைந்த ஒரு மனிதனின் பாதங்களிற் பணிந்து அவனடியிலே உட்கார்ந்து நான் உபதேசத்தைப் பெற வேண்டியவனானேன். இங்கே நான் குறிப்பிடுவது ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரைப் பற்றியே. இந்துக்களே! விக்

கிரஹ ஆராதனையிலிருந்து இத்தகைய பரமஹம்ஸர்கள் தோன்றியிருக்கின்றன ரென்றால் நீங்கள் வேண்டுவது யாது? விக்கிரஹ ஆராதனையா? அல்லது சீர்திருத்தக் காரர்களின் கொள்கைகளா? பதில் சொல்லுங்கள்! விக்கிரஹ ஆராதனையால் ராமகிருஷ்ண பரமஹம்ஸர்களை யுண்டாக்கக் கூடுமானால், நீங்கள் இன்னும் ஆயிரம் விக்கிரஹங்களை வைத்துக்கொண்டால்தான் என்ன? இறைவன் உங்கட்குத் துணைபுரிவாராக. உங்களாலான எவ்வழியிலேனும் இத்தகைய சீரிய நிலையினரை உண்டாக்குங்கள்! 'விக்கிரஹ ஆராதனை' கண்டிக்கப்படுகிறது! ——ஏன்! ஏனென்று கேட்டால் ஒருவரும் அறியார். சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் யூத வம்சத்திற்றோன்றிய யாரோ ஒருவன் அதைக் கண்டித்தானும்; அதாவது, தானுதரித்த விக்கிரகங்களைத் தவிர மற்ற ஒவ்வொருவருடைய விக்கிரகங்களையும் அவர் கண்டித்துவிட்டார்! ஏதாவது ஒரு அழகான உருவத்திலேயோ அன்றி விக்கிரஹத்திலேயோ பகவான் இருப்பதாக பாவிப்பதென்றால் அது மிகவும் கொடுமையானதாம்; வெகு பயங்கரமானதாம்; கொடிய பாபச் செயலாம்! ஆனால், இருபக்கங்களிலும் இரண்டு தேவதூதர் உட்கார, மேலே மேகமானது வந்து கவிய (இவ்வளவு ஆடம்பரத்துடன்) ஆண்டவன் ஹிருதயத்தில் இருப்பதாக பாவிப்பதென்றால், அதுவே மேலானதாம்; தெய்வீகம் பொருந்தியதாம்; எல்லாவற்றிலும் தூய்மை யானதாம்! ஆண்டவன் ஒரு புறா வடிவாய் வந்தால், அது தூய்மை யானவற்றுளெல்லாம் தூய்மை யானது! ஆனால் இறைவன் ஒருபசுவின் வடிவாய் வருவதென்றாலோ, அது அறியாதவர்களின் வெறும் மூடபக்தியே; அதைக் கண்டித்தொழித்துவிடு! இப்படித்தான் உலகநடை யிருந்து வருகிறது. இதனாற்றான் "எவ்வளவு

அறிவீனராயிருக்கின்றனர் மானிடர்!'' என்று கூறுகிறார் ஒரு கவிஞர். இதனுற்றான் தன்னைப்போல் பிறரையும் பாவித்து அவரவர்களின் நிலைக்கேற்றவாறு விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதென்பது அருமையாயிருக்கின்றது. இதுவே ஜன சமூகத்தின் கொடுமைகளுள் தலை சிறந்தது. இதுவே எங்கும் தோன்றுகிற துவேஷம், பொருமை, சச்சரவு, யுத்தம் முதலிய எல்லாத் தீமைகட்குங் காரணமாகும். சிறுவர்களே! ஏ மீசை முளைத்த சிசுக்களே! ஒரு நாளும் இச்சென்னையைவிட்டு வெளிப்போகாத நீங்கள், எழுந்து நின்று, பாரம்பரியமாய் வந்த ஆயிரக்கணக்கான ஆசாரங்களைக் கொண்டுள்ள இம்முப்பத்து முக்கோடி ஜனங்களுக்கும் புதிய விதிகளை நிர்ணயிக்கப் புறப்பட்டு விட்டீர்கள்! உங்களுக்கு வெட்கமில்லையா? இம்மடமையை விட்டு இப்பொழுதே விலகுங்கள். உங்கள் பாடங்களை நீங்கள் முதலில் கற்றுக்கொள்ளுங்கள். ஒழுக்கமிலாச் சிறுவர்காள்! கடுதாசியில் ஏதோ சிலவரிகளைக் கிறுக்கிவிட்டு அதை ஒரு மடையனைக்கொண்டு அச்சேற்றி வெளியிட்டு விடுவதாலேயே, இவ்வுலகத்துக்கெல்லாம் போதிக்கக்கூடிய ஆசாரியர்களாகி விட்டதாக நினைத்துக் கொள்ளுகிறீர்கள்! நீங்கள் சொல்வதே இந்தியாவின் பொதுஜன வாக்கென்று எண்ணுகிறீர்கள் போலும்!—அப்படித்தானே?

இச் சென்னையிலுள்ள சீர்திருத்தக்காரர்களிடம் எனக்கு மிகுந்த மரியாதையும் அன்பும் உண்டு. தங்கள் நாட்டினிடமும், ஏழை ஜனங்களிடமும், தாழ்த்தப்பட்ட மக்களிடமும், அவர்கள் கொண்டிருக்கும் அன்பிற்காக இச்சென்னைச் சீர்திருத்தக்காரர்களிடம் நான் மிகுந்த மதிப்பையும் அத்யந்த அன்பையும் கொண்டுள்ளேன். ஆனல் சகோதர வாஞ்சையோடு அவர்களுக்கு யான்

சொல்லக்கூடியது என்னவென்றால், அவர்கள் கொண்டுள்ள முறையானது தப்பென்பதே. நூற்றுக்கணக்கான வருடங்களாய் அம்முறை அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. சிறிதும் பயனில்லை. ஆகவே இப்பொழுது ஒரு புது முறையைக் கண்டுபிடிக்க நாம் முயலுவோம். இந்தியாவிலே சீர்திருத்தக்காரர்கள் தேவையாயிருந்த காலம் எப்பொழுதாவதுண்டா? இந்திய சரித்திரத்தை நீங்கள் படித்திருக்கிறீர்களா? சங்கரர் யார்? இராமானுஜர் யார்? சைதன்யர் யார்? கபீர் யார்? தாது யார்? ஒருவர் பின் ஒருவராய், முதன்மை யுற்ற சிறப்பு வாய்ந்த நக்ஷத்திரக் குழாமெனத் தோன்றிய இவ் வாசாரியர்கள் யார்? தாழ்ந்த வகுப்பாரிடம் இராமானுஜர் இரக்கங்கொள்ளவில்லையா? அவர் தமது வகுப்பாருடன் பறையர்களையும் சேர்த்துக்கொள்ளத் தம் ஆயுள் நாளளவும் முயன்று வரவில்லையா? அதுமட்டுமா? மகம்மதியரையும் அவ்வாறு சேர்த்துக்கொள்ள முயலா தொழிந்தனரோ? நானக் என்பார் இந்துக்களோடும், மகம்மதியர்களோடும் கலந்து நாட்டிற் புதியதொரு நிலைமையை யுண்டாக்கவில்லையோ? அவர்களெல்லோரும் இவ்வாறே முயன்றனர். அவர்களாற் செய்யப்பட்ட அரிய வேலை இன்றளவும் நடந்தே வருகின்றது. அவர்கள் தற்காலச் சீர் திருத்தக்காரர்களைப்போல் வீண் ஆடம்பரங்கள் செய்து பெருமை பேசிக் கொள்ளவில்லை. இன்றைய சீர்திருத்தக்காரர்கள் செய்வதுபோல் அவர்கள் எப்பொழுதும் பிறரைச் சபித்தது கிடையாது. ஆசீர்வாதங்களே அவர்களின் வாய்களினின்றும் சதா ஒலித்துக்கொண்டிருந்தன. அவர்கள் ஒரு நாளும் கண்டனம் செய்திலர். சமூகமானது எப்பொழுதும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதையே ஜனங்களிடை உரைத்து வந்தனர். நாட்டின் பண்டைய

நிலைதனை நோக்கி யுணர்ந்தவராய் "ஓ இந்துக்களே! நீங்கள் செய்துவந்தவை யெல்லாம் நல்லனவே; ஆயின் சகோதரர்களே! இனி அதைவிட இன்னும் மேலான காரியங்களைச் செய்வோம். நீங்கள் நல்லவர்களாகவே இருந்து வருகிறீர்கள்; இப்பொழுதோ நாம் இன்னும் மேலானவர்களாவதற்கு முயலுவோம்" என்றே கூறினர். இதிலுள்ள அளவற்ற வித்தியாசத்தைக் கவனியுங்கள். நமது இயற்கைக் கொத்த வழிகளிலன்றோ நாம் முன்னேறவேண்டும். அன்னிய தேசத்து ஜனங்களால் நமக்குக் காட்டப்படும் புதிய வழிகளில் நமது ஆசாரங்களைத் திருத்தப் பிரயத்தனப்படும் செய்கைகளனைத்தும் வீணனவையே. அது முற்றுப்பெருத காரியம்; அவ்விதம் எந்நாளும் நடை பெருதென்பது திண்ணம். நாம் திருந்தி, முற்றிலும் மாறி இதர தேசத்தினரைப்போல் ஆவதென்பது முடியாத காரியம். இங்ஙனம் அருளிய ஈசனை நாம் போற்றுவோமாக. இதனல் அன்னியரின் சமூக ஏற்பாடுகளை நான் கண்டிக்க வரவில்லை. அவைகள் அவர்களுக்கு ஏற்றவைகளே; ஆனல் நமக்குச் சிறிதும் பொருந்தா. அவர்களுக்கு அமிருதமாயிருப்பது நமக்கு விஷமாயிருக்கலாம். இதை நாம்முதலில் உணரவேண்டும். அவர்களின் சாஸ்திரஆராய்ச்சிகளுக்கும், அவர்களின் சமூக ஏற்பாடுகளுக்கும், அவர்களின் பரம்பரையான கொள்கைகளுக்கும் ஏற்றவாறு அவர்கள் தற்கால நிலையை யடைந்திருக்கின்றனர். நாமோ, நமது புராதன அனுஷ்டான முறைகளுக்கும் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் இயற்றிவரும் கர்ம பலன்களுக்கும் ஏற்றவாறு, நமது சொந்த வழியிலேயே, நமதியற்கைக் கொத்த முறையிலேயே தான் விருத்தியடையவேண்டும். எக்காலத்தும் அதனை யொட்டியே நாம் நமது காரியங்களைச் செய்யவேண்டும்.

பின் எனது முறை எது? நமது பழைய பெரியோர்களான ஆசாரியர்களின் கொள்கைகளைப் பின்பற்றுவதே எனது முறை. அவர்கள் செய்துவந்த வேலையை யான் நன்றாய்ப் படித்துணர்ந்திருக்கிறேன். அவர்களனுசரித்த மார்க்கத்தைக் கண்டுபிடிக்கும் பேற்றையும் நான் பெற்றிருக்கிறேன். சமூகங்களை ஏற்படுத்தியவர்கள் அம்மகான்களே. சமூகங்களுக்கு பலத்தையும், தூய்மையும், உயிரையும் தந்த பெரியோர் அவர்களே. அவர்கள் மிகவும் ஆச்சரியகரமான காரியங்களைச் செய்திருக்கின்றனர். நாமும் அம்மாதிரியே இன்னும் அதிக ஆச்சரியமான வேலைகளைச் செய்தல்வேண்டும். தற்கால நிலையும் சந்தர்ப்பங்களும் சிறிது மாறுபாடடைந்திருக்கின்றன. அதற்கேற்றாற்போல் நமது வேலை முறையையும் சிறிதளவே மாற்றிக்கொள்ளவேண்டும்; அவ்வளவுதான். மனிதர்களின் மனப்போக்கானது எவ்விதம் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கின்றதோ, அவ்வாறே தேசீய சமூகங்களும் தனித்தனியே வெவ்வேறான முக்கிய நோக்கங்களைக் கொண்டனவாயிருக்கின்றன. ஒரு தேசமானது இங்கிலாந்தைப் போல், ராஜீய பலத்தையே முக்கிய நோக்காய்க் கொண்டு அதற்கேற்றபடி நடந்துகொண்டு வருகிறது. மற்றொன்றோ லௌகிக சுக வாழ்க்கையையே முக்கியமாகக் கொண்டிருக்கிறது. இம்மாதிரியே எல்லா நாடுகளும் வெவ்வேறு லக்ஷியங்களைக் கொண்டிருக்கின்றன. நமது இந்தியாவிலோ மதமே முக்கியமானது. மற்றதெல்லாம் இத்தெய்வீக வாழ்க்கைக்கு அனுகுணமானவைகளே. எந்தச் சமூகமானது நூற்றுக்கணக்கான வருஷங்களாய் அனுசரித்து வந்த தனது முக்கிய லக்ஷியத்தினின்றும் மாறுகிறதோ, அந்தச் சமூகம் உடனே நசித்துப்போகும். ஆகையால் நீங்கள் உங்கள் மதத்தைத் தூர எறிந்துவிட்டு

ராஜ்ய தந்திரத்தையோ, சமூக ஏற்பாடுகளையோ, அன்றி வேறெந்த விஷயத்தையோ உங்கள் தேசிய வாழ்க்கையின் முக்கிய நோக்கமாக எடுத்துக்கொள்ள முயலுவீர்களானுல் அந்த க்ஷணமே நீங்கள் அழிந்துவிடுவீர்கள். இவ்விதம் அழிந்து போகாமலிருக்க வேண்டுமானுல் நீங்கள் எக்காரியத்தையும், எல்லா வேலைகளையும் மத சம்பந்தமாகவே செய்தல்வேண்டும். உங்கள் எல்லா நாடி நரம்புகளும் இம்முக்கிய நோக்கத்திற் கொத்த வழியிலேயோ துடிப்பனவாகுக. மதமே உங்கள் முதுகெலும்பாக இருக்கட்டும். அமெரிக்காவில், அதனுல் எவ்வெவ் வழியில் சமூக ஏற்பாடுகளுக்கு நன்மையுண்டாகுமென்பதை எடுத்துக் காட்டாமல் அவர்களுக்கு மதத்தைப்போதிக்க முடியவில்லையென்பதை நான் கண்டிருக்கிறேன். வேதாந்தத்தினுல் எப்படி ராஜீயவிஷயங்களில் ஆச்சரியமான மாறுதல்களை அடையக்கூடுமென்பதைக் காட்டாமல் இங்கிலாந்தில் மதத்தைப் போதிக்க என்னுற் கூடவில்லை. அதுபோலவே இங்கே, இந்தியாவில் சமூகச் சீர்திருத்தங்களை, இப்புதுத் திருத்தங்களால் எவ்வாறு இன்னும் மேலான தெய்வீக வாழ்க்கையைக் கொள்ள இயலுமென்பதைக் காட்டியே போதித்தல் கூடும். ராஜீய விஷயங்களையோ, அவற்ருல் இத்தேசத்தின் இன்றியமையாதனவான பாரமார்த்திக வழிகள் எப்படி விருத்தியடையும் என்பதைக் காட்டுவதாலேயோ போதிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி சொந்த நோக்க மொன்றிருப்பது போலவே ஒவ்வொரு சமூகத்துக்குமுண்டு. நீண்ட காலத்துக்கு முன்பே நமது நோக்கமானது இன்னதெனத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. எக்காலத்தும் அதையே நாம் கைக்கொள்ள வேண்டிய தவசியம். அது அவ்வளவாகக் கெட்டதொரு நோக்க மல்ல.

இவ் வுலகத்தில் பொருளை நினைப்பதை விடுத்து தெய்வ அருளைச் சிந்தித்திருப்பது ஒரு கெட்ட நோக்கமா? மனிதனைவிட்டு தெய்வமே சத்தியமெனக் கொள்வது அவ்வளவு இழிந்த நோக்கமா? இவ்வுலகவாழ்க் கையில் தீவிரமான வெறுப்பும், மோக்ஷமெனும் அவ்வுல கத்தே அவ்வளவு தீவிரமான திடநம்பிக்கையும், அவ்வளவு மேலான தியாக பலமும், இறைவனிடம் அவ்வளவு பக்தி யும், அழிவற்ற பரமாத்மாவினிடத்து அளவிலாத நம்பிக் கையும் பல நூற்றாண்டுகளாய் உங்களிடம் இருந்து வரு கிறது. உங்களுள் எவரேனும் அவற்றைவிட்டு விடுங்கள் பார்க்கலாம்! ஒருவராலும் முடியாதென நான் உறுதி யாய்க் கூறுகிறேன். அறியாமையின் காரணமாய்ச் சிற்சில மாதங்கள் நாஸ்திக வாதம் பேசி அதனால் நீங்கள் வெறும் லௌகிகர்களாய் மாறிவிட்டதாய்க் கூறி என்னை ஏய்க்கப் பார்க்கலாம். ஆனால் உங்கள் நிலை இன்னதென்பதை நான் நன்றாய் அறிவேன். நீங்கள் தெய்வீக வாழ்க்கையை ஒரு சமயம் கைக்கொள்ளு வீர்கள் என்பது உறுதி. மறுபடியும் தீவிரமான ஆஸ்திகர்களாய் மாறிவிடுவீர்க ளென்பது நிச்சயம். உங்களது இயற்கையை நீங்கள் எவ்விதம் மாற்றிக்கொள்ள முடியும்? ஒருநாளும் முடியாது.

ஆகவே இந்தியாவில் எவ்வழியில் முன்னேற்ற முண் டாக வேண்டுமானாலும், முதன் முதல் மதமானது வெகு வாய் உயர்த்தப்பட வேண்டும். ராஜீய ஞானத்தையும் சமூகச் சீர்திருத்தங்களையும் இந்தியாவில் பரப்ப வேண்டு மென்று நீங்கள் நினைத்தால், முதலில் நாட்டை தெய்வீக மான ஆத்மார்த்திக விஷயங்களால் நிரப்புங்கள்! இதுவே முதல் முதல் நடைபெறவேண்டிய காரியமாகும்! முக்கிய மாய் நாம் முதலிற் செய்யவேண்டிய வேலை எது? ஒரு சில

ஜனங்களிடம் மறைந்து கிடக்கும் நமது சுருதிகள், உபநிஷத்துக்கள், புராணங்கள் முதலியவைகளிற் பொதிந்து விளங்கும் ஆச்சரியகரமான உண்மைகளை வெளிப்படுத்தி நாடு முழுதும் பரவும்படிச் செய்யுங்கள்! தேச முழுவதும், வடகோடியிலிருந்து தென் கோடிக்கும், கிழக்கு முனையிலிருந்து மேற்கு முனைவரையிலும், இமயமுதல் குமரி வரையிலும், சிந்து முதல் பிரம்மபுத்திரா வரையும் உள்ள எல்லாப் பாகங்களிலும் பரவும்படி பிரசாரம் செய்யவேண்டும்! ஒவ்வொருவரும் இவ்வுண்மைகளை அறிதல் அவசியம். ஏனென்றால் "இது முதலில் கேட்கப்படவேண்டும்; கேட்டபின் அதைப்பற்றிச் சிந்தித்தல் வேண்டும்; பின்பு அதில் நிலைத்திருத்தல் வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஜனங்கள் முதலில் இதைக் கேட்கட்டும். தங்களுடைய சொந்த சுருதிகளிலுள்ள மேலான உண்மைகளை ஜனங்கள் கேட்குமாறு செய்பவர் எவராயினும், இன்று மகா கீர்த்தி வாய்ந்ததொரு கர்மாவைச் செய்தவராவர். இதற்கு இணையான வேறொரு கர்மாவே கிடையாது. இக்கலி யுகத்திலே ஒருவன் முக்தி யடைவதற்கு வேண்டிய வழி ஒன்றுதான். மற்ற யுகங்களிற் செய்யவேண்டிய பெரிய யாகங்கள், கொடிய தவங்கள் முதலியவைகள் இக்காலத்தில் வேண்டியதில்லை. ஆனால் ஒரே ஒரு கர்மா இருக்கிறதென்று மனு கூறியுள்ளார். அதுதான் ஈகை அல்லது தானம். அதிலும் கொடுக்கக்கூடிய எல்லா தானங்களிலும் உத்தமமானது ஆத்மஞானத்தை யளிக்கும் மேலான வித்யாதானமே. அடுத்து வருவது லௌகிக அறிவைக் கொடுக்கும் தானமாகும். அதற்கடுத்தது ஓர் உயிரைக் காப்பாற்றுவதாகும். நான்காவது அன்ன தானம். மனு இவ்விதம் உரைத்துப் போந்தார்; ஜனங்களும் இன்னும் அதன்படி நடந்து வருகின்ற

னர். இந்த அபூர்வமான தர்மகுணம் வாய்க்கப் பெற்ற உங்கள் ஜாதியைப் பாருங்கள். இவ்வெளிய வறுமை நிறைந்த நாட்டின்கண் எவ்வளவு தர்மங்கள் ஆங்காங்கு நடக்கின்றன வென்பதைக் கவனியுங்கள். நாட்டின் விருந்தோம்பும் குணந்தானென்னே! ஒரு மனிதன் தன் நண்பர்களுடன் கூட விருக்குங்கால் எவ்வளவு நன்மை யடைவானோ அதைவிட அதிகமாய் உயர்ந்த எல்லா நலங்களுடனும் நாட்டின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் செல்லக்கூடிய அவ்வளவு தயாளம் இந்நாட்டிலன்றி வேறெங்கும் காணீர்! ஓர் கவளம் உணவு இருக்கும் வரையும் பிச்சைக்காரர்கள் பட்டினி கிடக்காத இந்த நாட்டின் ஈகைத் தன்மையைப் பாருங்கள்!

தர்மசீலமுள்ள இந்நாட்டில், தர்மத்து ளெல்லாம் தலையதாகிய பாரமார்த்திக ஞானத்தைப் பரவச் செய்யும் ஊக்கத்தை நாம் பெறுவோமாக. மேலும் ஆத்மஞானத்தின் வியாபகமானது இந்திய நாட்டின் எல்லைக்குள் மாத்திரமே இருக்கும்படி மட்டுப்படுத்துதல் கூடாது. அஃது உலகமெங்கணும் பரவுதல் வேண்டும். அங்ஙனமே இதுகாறும் நடந்து வந்திருக்கிறது. இந்தியாவின் மேலான எண்ணங்கள் உயர்ந்த தத்துவங்கள் எக்காலத்தும் இந்தியாவைவிட்டு வெளி நாடுகளுக்குச் சென்றதில்லை யென்றுவது, அன்னிய நாடுகளுக்கு உபதேசம் செய்வதன்பொருட்டு முதல் முதலில் வெளியேறிச் சென்ற சன்னியாசி நான்தான் என்றுவது எவரேனும் உங்கட்குரைப்பரேல் அவர்கள் தங்கள் நாட்டின் சரித்திரத்தை அறியாதவர்களேயாவர். எவ்வெக் காலங்களில் உலகமானது இத்தகைய உதவியை வேண்டி நின்றதோ, அவ்வக் காலங்களிலெல்லாம் இந்தியாவினின்றும் என்றுமழியாத் தெய்வீக ஊற்றானது பொங்கி யெழுந்து, முழு உலகத்தையும் வெள்ள

மாக்கியிருக்கிறது. உலகத்தின் பிற பாகங்களிலெல்லாம் ராஜீய ஞானமானது பரவிய காலங்களிலெல்லாம், அதற்காக யுத்த பேரிகைகளை முழக்கி ஏராளமான சைன்யங்களைத் திரட்டி மிகுந்த அமளியுடன் பல பாகங்களுக்கும் கொண்டுபோக வேண்டியிருந்தது. தீயையும், வாளையுங் கொண்டே லௌகிக ஞானத்தையும் சமூக அறிவையும் சில சமயங்களில் (ஜனங்களைத் துன்புறுத்திப்) பரவும்படி செய்திருக்கிறார்கள். ஆனால் ஆத்மீய ஞானமோ எவ்வித ஆடம்பரமுமின்றி மௌனமாகவே போதித்தல் கூடும். இதுவோ, கண்ணுக்குப் புலப்படாமலும், செவிக்குக் கேளாதபடியும், அவ்வளவு மெலினமாய்ப் பூமியில் விழுந்து ஏராளமான ரோஜாப்புஷ்பங்களை மலரச்செய்யும் பனியை நிகர்த்தது. இவ்விதமே இந்தியாவானது அடிக்கடிப் பல சமயங்களில் உலகத்திற்கு ஆத்மஞானத்தையளித்து வந்திருக்கின்றது. பிற நாடுகளை ஜெயிக்கும் வல்லமைபெற்ற ஒரு ஜாதியினர் புறப்பட்டு உலகத்திலுள்ள பல தேசங்களையும் ஒன்றாகப் பிணைத்து, ஒன்றுக்கொன்று சம்பந்த முண்டாகும்படிப் போக்குவரவுக் கான பல வழிகளை எற்படுத்திய காலங்களிலெல்லாம், இந்தியாவும் உடனே எழுந்து, உலகத்தின் முன்னேற்றத்தையும் நலத்தையுங் கருதி, தனது பங்காகிய ஆத்மஞானத்தை எல்லா நாட்டினருக்கும் அளித்து வந்திருக்கிறது. வெகு காலத்திற்கு முன்பே இந்தியா இவ்வாறு செய்தது; புத்தர்பிறந்த பின்பும் ஒருமுறை நிகழ்ந்தது; இதற்குச் சான்றுகள் சைனதேசத்திலும், ஆசியா மைனரிலும், மலேயா தீபங்களின் மத்தியிலும் இன்றைக்கும் காணப்படுகின்றன. கிரீஸ் தேசத்து மஹா வல்லமை படைத்த ஜெயசீலனான அலெக்ஸாந்தர் ஒரு சமயம் அக்காலத்திய உலகத்தின் நாலாபக்கங்களையும் ஒன்று சேர்த்த காலத்தில் இவ்வாறு

நடந்தது. அக்காலத்தில் இந்தியாவின் ஆத்மஞானமானது உலகம் முழுதும் பரவி வெள்ளக் காடாக்கியது. இது காலை மிகவும் பெருமை வாய்ந்ததென்று டம்பமாய்ப் பேசிக்கொள்ளும் ஐரோப்பிய நாகரீகமானது, அவ்வாத்ம ஞான வெள்ளத்தின் ஒரு சிறு துளியால் ஏற்பட்ட பயனேயாகும். அதே சந்தர்ப்பம் இப்பொழுது மறுபடியும் தோன்றியிருக்கிறது. ஆங்கிலேயர் தமது பலத்தால் இதற்கு முன் ஒருகாலத்திலும் இல்லாதபடி, இப்பொழுது உலகத்திலுள்ள பல தேசங்களையும் ஒன்றுபடுத்தி யிருக்கின்றனர். உலகத்தின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குப் போகக் கூடியவாறு, பல சாலைகளையும் வழிகளையும் உண்டாக்கி யிருக்கிறார்கள். ஆங்கிலேயரின் திறமையால், இன்று உலகமானது இதற்கு முன் என்றுமில்லாத விதமாய் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் எங்கும் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வியாபார ஸ்தலங்களைப்போல், சரித்திரமேற்பட்ட நாள்முதல் இதுவரையிலும் என்றும் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே, தெரிந்தோ தெரியாமலோ இந்தியாவானது உடனே எழுந்து ஆத்மஞான விஷயங்களை மழைபோல் தானமாகப் பொழிகிறது. இவை மேற்கண்ட பல சாலைகளின் வழியாகவும் ஓடிப் பாய்ந்து உலகத்தின் நான் கெல்லைகளுக்கு முட்பட்ட எல்லா பாகங்களையும் நிரப்ப வேண்டும். நான் அமெரிக்காவுக்குச் சென்றது என் செயலல்ல; அன்றி உங்கள் செயலுமல்ல. இந்தியாவை நலமுறச் செய்துவரும் நம் பாரதமாதாவே என்னை யனுப்பினாள்; என்னைப்போன்ற நூற்றுக்கணக்கான பேர்களை உலகத்தின் எல்லா நாடுகளுக்கும் அனுப்பப் போகிறாள். பூமியிலுள்ள எந்தச் சக்தியும் இதைத் தடுக்க இயலாது. ஆகையால் இது நடந்தேதீரவேண்டும். நீங்கள் உங்கள்

மதத்தைப் பரவச்செய்ய இந்தியாவை விட்டு வெளியேறிச் செல்லவேண்டும். உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு ஜாதியாருக்கும் நீங்கள் உங்கள் மதத்தைப் போதிக்க வேண்டும். ஆத்மஞானத்தைப் பரப்புவீர்களானால், அத்துடன் லௌகிக ஞானமாகட்டும் அல்லது நீங்கள் விரும்பும் வேறெந்த ஞானமாகட்டும், எல்லாம் தாமாகவே உண்டாகும்.

இந்நாட்டிலே, நீங்கள் ஆத்ம ஞானத்தைப்பற்றி அடியோடு மறந்து, லௌகிக ஞானத்தை மாத்திரம் பெற முயற்சி செய்வீர்களாயின், யான் தெளிவாய்க் கூறுகிறேன், நிச்சயமாய் உங்கள் முயற்சிகள் யாவும் வீணாகவே முடியும். அதில் இந்திய ஜனங்களுக்கு ஒருநாளும் பற்றுதல் உண்டாகாது. மிகப் பெரிய புத்தமத இயக்கமும் இங்கே தவறிப்போனதின் காரணங்களுள் இதுவும் ஒன்றாகும். ஆகையால், அன்பிற்சிறந்த நண்பர்காள்! எனது முறை யாதென்றால், நம் நாட்டு இளைஞர்களுக்கு நல்ல பயிற்சியைக் கொடுக்கவும், அவர்களை இந்தியாவில் மாத்திரமன்றி அந்நிய நாடுகளுக்கும் சென்று நமது வேதங்களிற் பொலிந்து விளங்கும் அரிய உண்மைகளை மக்கட்கும் போதிக்க வல்லவர்களாய் ஆக்குதற்கும் தகுந்த சங்கங்கள் பல இந்தியாவில் ஸ்தாபித்தல் வேண்டுமென்பதே. இதற்கு வேண்டுவது என்ன? மனிதர்—ஆண்மை யுடையோர்—தம் மனச்சாக்ஷிக்கு மாறாய் நடவாத வீரர்கள் தேவை. திரமும் திட நம்பிக்கையும், சிரத்தையும் உடைய சிறுவர்களே வேண்டும். இத்தகைய வீர வாலிபர்கள் நூறுபேர் முன்வரட்டும், இவ்வுலகத்தையே தலைகீழாய் மாற்றி விடலாம். இப்படிப்பட்டவர்களின் மனோ சக்தி, பிரபஞ்சத்திலுள்ள வேறெதையும்விட, வலிமை படைத்ததாகும். இவர்களின் மனோசக்திக்கு முன்

ளுல் எதுவும் நிற்கமுடியாது; பணியவேண்டியதுதான். ஏனென்ருல் வலிமை படைத்த, மாசிலா மனத்தின் சங்கற்பமான்து சர்வ சக்தியையும் உடையது. அது இறைவனிடமிருந்தே உண்டாவதாகும். இதை நிச்சயமென்று நம்புங்கள் ! தாமதமின்றி உங்கள் நாட்டுச்சகோதரர்களுக்கும் உலகத்தின் மற்றெல்லாத் தேசத்தினர்க்கும் உங்கள் மதத்தின் மேலான உண்மைகளைப் புகட்டுங்கள் ! புகட்டுங்கள் !! இதுசமயம் உலகமானது அவற்றை எதிர்பார்த்து நிற்கின்றது. அநேக நூற்ருண்டுகளாய் மக்களிடத்து இழிந்த பிற்போக்கான கொள்கைகளே புகட்டப்பட்டிருக்கின்றன. அவர்கள் மிகவும் தாழ்ந்தவர்களே என்றும், அநேகமாய் எல்லோரும் மனிதர்களே அல்லர் என்றும் உலகம் முழுதும் சொல்லப்பட்டு வந்திருக்கின்றனர். இத்தகைய தப்பான கொள்கைகளாற் பல நூற்ருண்டுகளாய் பயமுறுத்தப்பட்ட எளியோர், இதன் பயனுய், நாளடைவில், மிருகங்களுக்குச் சமானமாகவே ஆய்விட்டார்கள். ஆத்மாவைப் பற்றிக் கேள்விப்பட, ஒருநாளும் அவர்கள் இடங்கொடுக்கப்படவில்லை. ஆத்மாவைப்பற்றி அவர்களைக் கேட்கும்படிச் செய்யுங்கள். ஆத்மாவானது கடையரிலும் கடையோரான இழிந்தோருள்ளும் இருக்கிறதென்பதை அவர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும் ! பிறப்பிறப்பு இல்லாததும், கத்தியால் குத்த முடியாததும், தீயினுல் எரிக்க வொண்ணுததும், காற்ருல் உலராததும், அழிவில்லாததும், ஆதியந்த மற்றதும், சர்வ சுத்தமாயும், சர்வ சக்தியுடையதும், சர்வ வியாபியாய் விளங்குவதுமான இவ்வாத்மாவைப் பற்றி ஒவ்வொருவரும் காதால் கேட்கட்டும்! ஆகவே ஆத்மாவைப் பற்றி எங்கும் புகட்டுங்கள்! பிரசாரம் செய்யுங்கள் ! செய்து, உங்களிடத்திலேயே நீங்கள் நம்பிக்கை யுள்ளவர்க ளாகுங்கள். உங்களுக்கும்

ஆங்கிலேயருக்கும் உள்ள வித்தியாசமென்ன? மதம், கடமை முதலியவைகளைப்பற்றி எவ்வளவு வேண்டு மானாலும் பேசட்டும்; ஆனால் வித்தியாச மின்ன தென் பதை நான் அறிந்துகொண்டு விட்டேன். வித்தியாசம் இதுதான்—ஆங்கிலேயன் தன்னிடத்தில் நம்பிக்கை யுடை யவன். உங்களுக்கோ உங்களிடத்தில் நம்பிக்கை கிடையாது. தான் இங்கிலீஷ்காரன் என்பதிலும், எதை யும் செய்யத் தனக்கு வல்லமையுண்டென்றும் அவன் தீவி ரமாய் நம்புகிறான். இந்த நம்பிக்கையே அவனுக்குப் பூரிப் பையும் அளவற்ற பலத்தையுங் கொடுக்கிறது. தான் நினைத்த காரியம் எதையும் உடனே செய்து முடிக்கிறான். ஆனால் உங்களால் ஒன்றும் செய்ய முடியாதென்று வெகு காலமாய்ச் சொல்லப்பட்டும் போதிக்கப்பட்டும் வந்திருக் கிறீர்கள்; எனவே நாளுக்கு நாள் பாழாகிக்கொண்டு வரு கிறீர்கள். ஆகையால், அடியோடு ஒழிந்துபோகாமல் நீங் கள் வாழ வேண்டுமானால், உங்களிடத்தில் நம்பிக்கை கொள்ளுங்கள். இனி வேண்டுவது யாதெனில், நமது பலத் தைப் பெருக்கிக்கொள்வதேயாகும். நாம் பலவீனர்களாய் விட்டோம்; அதன் பயனாய்க் கெடுதலான ரகஸிய வித்தை கள்(Occultism) போன்ற பல கேவலமான விஷயங்களெல் லாம் நம்மிடம் புகுந்து விட்டன. இவைகளில் பெரிய உண் மைகள் இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் இவை நம்மை அநேகமாய் நசித்து விட்டன. உங்கள் நரம்புகளை வலிமை பெறச் செய்யுங்கள். இரும்பினையொத்த தசையும் எஃகைப் போன்ற நரம்புகளுமே இப்பொழுது நமக்கு வேண்டும். வெகு நாட்களாய் அழுது கொண்டிருந்து விட்டோம்; இனி அவ்வழுகை வேண்டாம்! சுய பலங்கொண்டெழுந்து வீரமனிதர்களாய் நில்லுங்கள்! நம்மை ஆண்மை படைத் தவர்களாக்கும் மதமே நமக்கு வேண்டும்! ஆண்மக்க

ளாக்கும் கொள்கைகளே நமக்கு வேண்டும்! எங்கும் இவ் வித ஆண்மை பயக்கும் படிப்பே நமக்கு வேண்டும். உண்மை எதுவெனத் தீர்மானிப்பதற்கு இதுதான் பரீக்ஷை. எந்த ஒன்று தேகத்திற்குப் பலவீனத்தைத் தருகிறதோ, எது நமது அறிவையும் மதத்தையும் பலவீனமாக்குகிறதோ அந்த ஒன்றை உடனே நஞ்செ௳ன ஒதுக்கித் தள்ளுங்கள்! அது உயிரற்றது; அது உண்மையாகாது. எது பலத்தைக் கொடுக்கிறதோ அது தான் உண்மை. உண்மை பரிசுத்த மானது. உண்மையே சர்வ ஞானத்தையும் அளிப்பது. ஆகையால் உண்மை என்பது பலத்தைத் தரவேண்டும்; அறிவைப் புகட்டவேண்டும்; வீரியத்தைப் பெருக்கவேண் டும். ஏதோ அற்ப அளவு உண்மை இருந்தாலும் ரகஸிய வித்தைகள் எல்லாம் நமக்கு பலவீனத்தையே தருவன வாகும். எனது வார்த்தைகளை நம்புங்கள்! அதைப்பற்றி எனது முழு ஆயுட்கால அனுபவத்தையே நான் இப்பொ ழுது கூறுகிறேன். இந்தியாவில் நான் அடி வைக்காத இடம் கிடையாது. அநேக குகைகளுள்ளும் நுழைந்திருக் கிறேன். இமயமலையிலும் வசித்து அங்கே தங்கள் வாழ்நாள் முழுவதும் கழித்த பல பேர்களையும் அறிந்திருக்கிறேன். எனது முடிவான தீர்மானம் இதுதான். முன் சொன்ன ரகஸிய வித்தைகள் யாவும் நமது வலிமையைக் குறைப்பன வேயாகும். எனது தேசத்தாரை நான் மிகவும் அன்பாய் நேசிக்கிறேன். இப்பொழுதிருக்கும் உங்கள் வலிமையற்ற நிலைமையையும், நாளுக்கு நாள் வீணாய்ப் பிற்போக்க டைந்து வருவதையும் பார்க்க என்னாற் சகிக்கமுடியவில்லை! இனியும் அவ்வாறு நீங்கள் துர்ப்பலத்தினராவதை நான் பார்க்க முடியாது! ஆகையால், "போதும், போதும்!" என்று கூவி, க்ஷீணித்து வரும் எனது நாட்டினர் நன்னிலை யை யடைவதற்காக, உங்கள் பொருட்டும், உண்மையின்

பொருட்டும் இப்பொழுதே என் குரலை உயர்த்திப் பேசக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்பொழுதுள்ள நிலையோடே னும் நில்லுங்கள்! ஆண்மையுடனிருங்கள்! உங்கள் உப நிஷத்துக்களைத் திரும்பவும் அணுகுங்கள். பலவீனத்தைத் தரும் இந்த அற்ப இரகஸிய வித்தைகளைவிட்டு விலகி, பிரகாசம் பொருந்தியதும், பலத்தைத் தருவதுமான மிக மேலான தத்துவங்களைக்கொண்டு விளங்கும் உபநிஷத்துக் களிடமே திரும்பச் செல்லுங்கள்! இந்த தத்துவ சாஸ்திரத் தையும், இதிலுள்ள சாதாரண உண்மைகளையும் எடுத்துக் கொள்ளுங்கள்! உலகத்திலுள்ள உயர்ந்த உண்மைகளெல் லாம் மிகவும் சாதாரணமானவையேயென்று நான் சொல் வதை நம்புங்கள். நீங்கள் இங்கு இருப்பது எவ்வளவு சாதாரணமானதோ அவ்வளவு சாதாரணமே அவை களும். உபநிஷத்துக்களிலுள்ள இவ்வுண்மைகள் உங்கள் முன்னால் நிற்கின்றன. அவற்றைக் கடைப்பிடித்து நடவுங் கள். இந்தியாவின் கதிமோக்ஷம் அப்பொழுது புலப்படும்.

இன்னும் ஒரு வார்த்தை; இத்துடன் முடித்து விடு கிறேன். இன்று தேசபக்தியைப்பற்றி எல்லோரும் பேசு கிறார்கள். தேசபக்தியில் எனக்கு நம்பிக்கையுண்டு. தேசாபிமான விஷயத்தில் என்னுடைய சொந்த நோக்க மொன்றும் என்னிடம் உளது. ஏதேனும் பெரிய காரிய மொன்றைச் செய்து நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கு மூன்று விஷயங்கள் மிகவும் அவசியமானவை. முதல் முதல் இருதய பூர்வமான உணர்ச்சி வேண்டும். விவேகத்தினா லும், புத்திசாலித்தனத்தினாலு மாவதென்ன? அவை சிறிது தூரம் சென்று அங்கே நின்று விடுகின்றன. அருள் சுரப்பது, ஆர்வமுண்டாவது, இருதயத்தின் மூலமாய்த் தான். முடித்தற்கரிய காரியங்களை முடிக்கவல்லது அன்பு தான். பிரபஞ்சத்திலுள்ள இரகசியங்களையெல்லாம் அறி

வதற்கு வாயிலாயிருப்பதும் இவ்வன்புதான். ஆகையால் சீர்திருத்தக் காரர்களாகவோ, தேசாபிமானிகளாகவோ இருக்க உத்தேசிக்கும் என் சிநேகிதர்காள்! இத்தகைய உணர்ச்சியை நீங்கள் முதலில் கொள்ளுங்கள். உங்களிடம் உண்மையில் இவ்வுணர்ச்சி இருக்கின்றதா? தேவர்களுடையவும், ரிஷிகளுடையவும் சந்ததியாரான கோடானு கோடி ஜனங்கள் இன்று மிருகங்களுக்குச் சமதையாக அவைகளின் சகோதரர் போன்ற நிலைக்கு வந்துவிட்டனரே என்ற உணர்ச்சி உங்களுக்கு இருக்கின்றதா? லக்ஷக் கணக்கான ஜனங்கள் இன்றையதினம் உணவின்றிப் பட்டினியாய்க் கிடக்கின்றார்களே! லக்ஷக் கணக்கான ஜனங்கள் பல நூற்றாண்டுகளாய் இப்பட்டினியால் மடிந்து வருகின்றார்களே யென்ற உணர்ச்சி உங்களுக்கு இருக்கின்றதா? அஞ்ஞானமானது இருண்ட மேகம்போல் சூழ்ந்து நாட்டைக் கவிந்துகொண்டு விட்டதேயென்பதை நீங்கள் உணருகின்றீர்களா? அவ்வுணர்ச்சி உங்களை அமைதி யற்றவர்களாக்கி விட்டதா? உங்களை நித்திரை யற்றவர்களாய்ச் செய்கின்றதா? அது உங்கள் இரத்தத்திற்குட் பிரவேசித்து இரத்தக் குழாய்களின் வழியே சுற்றி உங்கள் இருதயத்தைப்போல் ஓயாது துடித்துக் கொண்டிருக்கின்றதா? அஃது உங்களை அநேகமாய்ப் பித்தர்களாக்கி விட்டதா? நாட்டின் துக்கம், சீர்கேடு என்ற இவ்வொரே கவலை உங்களைப் பிடித்துக்கொண்டு விட்டதா? அதனால் உங்கள் பெயர், புகழ், பெண்டுபிள்ளைகள், சொத்து சுதந்தரங்கள் எல்லாவற்றையும் மறந்தீர்களா? உங்கள் தேகத்தையுங் கூட மறந்துவிட்டீர்களா? இந்த நிலைக்கு வந்துவிட்டீர்களானால் அதுவே தேசாபிமானியாவதற்கு முதற்படியாகும். நான் அமெரிக்காவுக்குச் சென்றது சர்வமத மகாசபையை உத்தேசித்தன்று

என்பது உங்களிற் பெரும்பாலோருக்குத் தெரியும். என்னிடம், என் இருதயத்தில் புகுந்திருக்கும் இவ்வுணர்ச்சிப் பேய்தான், நான் போனதற்குக் காரணம். நான் பன்னிரண்டு வருஷ காலம் இந்தியா முழுவதும் சுற்றினேன். முன்னேற்றத்திற்கான வேலை செய்யும் மார்க்கமொன்றும் புலப்படாததனாலேயே அமெரிக்கா சென்றேன். இது அச்சமயம் என்னை அறிந்திருந்தவர்களில் அனேகமாய் எல்லோருக்கும் தெரிந்த சங்கதியே. இந்த சர்வ மத சபையைப்பற்றி யாருக்கென்ன கவலை? இங்கே என் சொந்த இரத்தமும் சதையும் நாளுக்கு நாள் நசித்துப் போய்க் கொண்டிருக்கும்போது அவைகளைப் பற்றிய கவலை யாருக்கு?

இவ்வுணர்ச்சி உங்களிடம் இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், வெறும் வசைமொழிகளிலும் உபயோகமற்ற பேச்சுக்களிலுமே உங்கள் சக்தியையெல்லாம் செலவிடாது, ஏதாவது காரியத்திற் கொணரும் வழியொன்றைக் கண்டு பிடித்தீர்களா? வீணான தூஷணைகளைவிட்டு உபயோகமான காரியமேதேனும் செய்யவும், சில இனிய மொழிகளால் ஜனங்கள் படுந் துன்பங்களைச் சற்றே தணியும்படி செய்யவும், நடைப்பிணங்களாகிக் கிடக்கும் இக்கேவல நிலையினின்றும் அவர்களை விடுவிக்கவும் ஏதாவதொரு மார்க்கத்தைக் கண்டு பிடித்தீர்களா? இவைகளைச் செய்தால் மாத்திரம் போதாது. உங்கள் காரியத்தில் இடையூறுகள் மலைபோல் திரண்டுவரினும் அவற்றைத் தயங்காது எதிர்த்துச் செல்லும் திடமான மனோ சங்கற்பம் உங்களிடம் இருக்கின்றதா? முழு உலகமும் சேர்ந்து கையிற் கத்தி கொண்டு எதிர்த்து நின்றாலும், அப்பொழுதும் நீங்கள் சரியென்று நினைக்கும் காரியத்தைச் சற்றும் பின்வாங்காது செய்யவல்ல தைரியம் உங்களிடம் இருக்

கின்றதா? உங்கள் பெண்டு பிள்ளைகளே உங்களுக்கு விரோதமாய் நிற்பினும், உங்கள் பணமெல்லாம் இழக்க நேரிடினும், அதனால் உங்கள் பெயரே கெடுவதானாலும், மற்றெல்லாச் செல்வங்களும் போய்விடுவதாயிருந்தாலுங் கூட அப்பொழுதும் எடுத்த காரியத்தை விடாமல் உறுதியாய் நிற்பீர்களா? சகலமும் துறக்க நேரிடும் அக்காலத்தும், நீங்கள் கருதிய உங்கள் லக்ஷியம் கைகூடும் வரையில், இடைவிடாது உறுதியாய் நடந்து மேல் நோக்கிச் செல்வீர்களா? பர்த்ருஹரியார் சொல்வதுபோல், "ஞானிகளானோர் நிந்திப்பதானாலும் நிந்திக்கட்டும், அல்லது புகழ்வதென்றாலும் புகழட்டும்; சகல பாக்கியங்களையுங் கொடுக்கும் லக்ஷ்மிதேவியானவள் வந்தாலும் வரட்டும்; அன்றித் தனக்கிஷ்டமான விடத்திற்குப் போனாலும் போகட்டும்; மரணமானது இன்றே வருவதானாலுஞ்சரி; அல்லது இன்னும் நூறு வருஷங்கள் கழித்து வரினுஞ்சரி, எவனொருவன் உண்மையினின்றும் மயிரிழையேனும் பிறழாதிருப்பானோ அவனே உறுதியுடையோனாவான்." இவ்வுறுதி உங்களிடம் இருக்கின்றதா? இந்த மூன்று விஷயங்களும் — உண்மை யுணர்ச்சி; தக்க வழியொன்று காணல்; கண்ட அவ்வழியில் உறுதியுடனுழைத்தல் ஆகிய இவை — உங்களிடம் இருக்குமானால், உங்களுள் ஒவ்வொருவரும் அற்புதங்களைச் செய்வீர்கள். நீங்கள் பத்திரிகைகளில் எழுத வேண்டியதில்லை. பிரசங்கங்கள் செய்துகொண்டு ஊரூராய்ச் சுற்ற வேண்டியதில்லை. உங்கள் முகமே பிரகாசித்துக் கொண்டிருக்கும். அதுவே போதுமானது. நீங்கள் குகைகளுக்குள் வசித்தாலுங் கூட உங்கள் எண்ணங்களானவை அக்கற்சுவர்களின் வழியாகவும் ஊடுருவிச் சென்றுப் பலநூற்றாண்டுகள் வரை, அதாவது தகுதியுள்ள சிலர் தோன்றி, அவர் மனதுட்

புகுந்து அங்கே வேலை செய்யும்வரை, உலகமுழுவதும் பரவிச் சூழ்ந்து கொண்டிருக்கும்.

இன்னும் ஒரே ஒரு வார்த்தை. அதிகநேரம் உங்களைத் தாமதிக்க வைக்கிறேனோ வென்று அஞ்சுகிறேன். எனது நாட்டுச் சகோதரர்களே! என் பிரிய நண்பர்களே! எனதருமைக் குழந்தைகளே! நமது ஜாதீயக் கப்பலானது கோடானுகோடி ஜனங்களை யேற்றிக்கொண்டு வாழ்க்கை யென்னும் கடலைக் கடந்து அக்கரை சென்றிருக்கின்றது. ஒளிமிகுந்து விளங்கிப் பல நூற்றாண்டுகளாய் ஓடிக் கொண்டிருந்த இக்கப்பலின் மூலமாய் அநேககோடி ஜனங்கள் இக் கடலைக் கடந்து ஆனந்த நிலையாகிய அக்கரையை அடைந்திருக்கின்றனர். ஆனால், இன்றைக்கோ, நம்முடைய குற்றத்தினாலேயே இக் கப்பலில் ஒரு ஓட்டை யுண்டாகிச் சிறிது கெடுதல் ஏற்பட்டிருக்கிறது—அதற்காக அதைச் சபித்துவிடத் துணிகிறீர்களா? உலகத்தில் வேறெதையும் விட மிகவும் அபரிமிதமான வேலை செய்துவந்த இதனைச் சபிக்க, தூஷணை வார்த்தைகளைப் பேச, எழுந்து நிற்பது உங்களுக்கு நியாயமா யிருக்கின்றதா? நமது ஜன சமூகமாகிய இந்த ஜாதீயக் கப்பலிலே இன்று சில ஓட்டைகள் காணப்பட்டால், அதன் வீர புத்திரர்களாகிய நாம் இங்கு இருக்கின்றோமே! அவ்வோட்டைகளை அடைக்க யாவரும் முற்படுவோம். மனப்பூர்வமாய்க் கடைசிவரையில் உழைப்போம். நம்மால் முடியாவிட்டால் இறப்போம். ஆகையால் தூஷிப்பதை விடுத்து நாமெல்லோரும் ஒன்றுகூடிக் கப்பலைப் பழுதுபார்ப்பதிலேயே நமது மனத்தைச் செலுத்துவோம். இச் சமூகத்தைப்பற்றிக் கடுமையான ஒரு வார்த்தையேனும் பேசாதீர்கள். முற்காலத்தில் அஃதிருந்த மேன்மையைக் கண்டறிந்த நான் எப்படி அதனிடம் அன்புகொள்ளாமலிருக்க முடியும்? பூரணமான அன்பு

எனக்கு இருக்கின்றது. நீங்கள் தேவர்களின் வம்சத்தில் தோன்றியவர்கள் என்றதனாலேயே, மகா கீர்த்தி வாய்ந்த முன்னோர்களின் குழந்தைகளாய் நீங்கள் இருப்பதனாலேயே, உங்களிடம் எனக்கு அளவற்ற அன்புண்டாகிறது. எல்லா ஆசிர்வாதங்களும் நன்மைகளும் உங்களுக்கு உண்டாவதாக! சபித்தலென்பது ஒரு நாளும் வேண்டாம். எனதன்புள்ள குழந்தைகாள்! எனது எல்லா முறைகளையும் உங்களுக்குச் சொல்வதற்காகவே நான் உங்களிடம் வந்திருக்கிறேன். நீங்கள் அதைக் கேட்பீர்களானால், உங்களோடு கூடி யுழைக்க நானும் தயாராயிருக்கிறேன். நீங்கள் செவி கொடுக்காமல், என்னை இந்தியாவைவிட்டு வெளியே உதைத்துத் துரத்துவதென்றாலும், மறுபடியும் நான் திரும்பிவந்து, "சகோதரர்களே! நாமெல்லோரும் முழுகிக்கொண்டிருக்கிறோம்; உங்களுடன் கூடியிருக்கவே நானும் வந்துள்ளேன்; முழுகிப்போவதே நமது கதியாகுமானால், நாமெல்லோரும் ஒன்றாய் முழுகிவிடுவோம்; ஆனால் சாபங்கள் மாத்திரம் நமது வாயினின்றும் ஒரு நாளும் வராமலிருக்கட்டும்" என்று உங்களுக்குக் கூறுவேன்.

---

கேசரி அச்சுக்கூடம், சென்னை.

## SANSKRIT PUBLICATIONS

**The Upanishad Series by Swami Sharvananda—**

| | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| Isha Upanishad | ... | 0 | 6 | 0 |
| Kena Upanishad | ... | 0 | 6 | 0 |
| Katha Upanishad | ... | 0 | 12 | 0 |
| Prasna Upanishad | ... | 0 | 10 | 0 |
| Mundaka and Mandukya Upanishads (combined) | ... | 0 | 12 | 0 |
| Taittiriya Upanishad | ... | 0 | 14 | 0 |
| Aitareya | ... | 0 | 6 | 0 |

**(For subscribers of Vedanta Kesari, Price each As. 2 less)** Each of the above, contains Introduction, Sanskrit Text, Paraphrases with word for word literal Translation in English, Running translation and Comments.

## TELUGU PUBLICATIONS

| | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| Narada Bhakti Sutra | ... | 0 | 4 | 0 |
| Words of the Master by Swami Brahmananda | ... | 0 | 6 | 0 |
| Chicago Address by Swami Vivekananda | ... | 0 | 6 | 0 |
| The Life and Teachings of Swami Vivekananda (For subscribers of *V. K.* or *R. V.* As. 6) | ... | 0 | 8 | 0 |
| Raja Yoga by Swami Vivekananda | ... | 1 | 4 | 0 |
| Karma Yoga by Swami Vivekananda | ... | 0 | 12 | 0 |
| Gospel of Sri Ramakrishna | ... | 1 | 8 | 0 |
| Bhaktiyogam | ... | 0 | 8 | 0 |

## CANARESE PUBLICATIONS

| | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| Sri Ramakrishna Lilaprasanga | ... | 1 | 0 | 0 |
| Gospel of Sri Ramakrishna: Re. 1. Superior Edition | ... | 1 | 12 | 0 |
| Path of Devotion | ... | 0 | 2 | 0 |
| Raja Yoga by Swami Vivekananda | ... | 1 | 0 | 0 |
| My Master by Swami Vivekananda | ... | 0 | 6 | 0 |
| Dialogues of Swami Vivekananda | ... | 1 | 12 | 0 |

## ENGLISH PUBLICATIONS